
# நவரோஜா

மலர் 1. இதழ் 1 15—7—1989



நம் சமுதாயத்தின் உயர்வே
எமது உயிர் மூச்சு!

1. 9. 1989


உள்ளூர் விலை ரூ. 5/-


அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

# தமிழன்னையே!

பொதிகை மலையில் பிறந்தவளே!
கூடல் மாநகர் மதுரையில் வளர்ந்தவளே!
இயலாம் இசையாம் நாடகமாம் முவ்வடிவில்
உலகை வலம் வருப வளே!
அழகே! அமுதே! அருங்கனியே!
என்னுயிரினும் மேலான அன்னையே!
த மி ழ் த் தா யே!
மருவிய நின் மொழியையும் துணை கொண்டு
இப்புது ரோஜாவை நின் பாதத்தில்
காணிக்கையாக சமர்ப்பிக்கின்றேன்!
அன்னையே------ சமர்ப்பிக்கின்றேன்!
உன்னைத் தவழவிட்டு அதில் நான்
அழகு பார்க்க - அழகுற விரும்புகின்றேன்
அதிலே குறை காண்பின் அன்னையே தமிழே!
என்னை நீ பொறுத்தருள்வாயாக!
அன்னையே தமிழ் அன்னையே!

அறையிலுள்ளவர்கள் அம்பலத்திற்கு (அரங்கத்திற்கு) வா.)
இதுவே ரோஜாவின் தாரக மந்திரமாகும்.





எனது இனிய நண்பர்களே!

என் மனதிற்குள்ளே ஓர் ஆசை, ஓர் உந்தல் ஓர் நிர்க்கமான முடிவு! பத்து வருடங்களுக்கு முன் எண்ணத்தில் புகுந்துவிட்ட ஒரு வேட்கை இன்னும் சுருதி குறைந்ததாகத் தெரியவில்லை.

ஆம்! நான் பிறந்த மண், நான் பழகிய மனிதர்கள், நான் வாழ்ந்த நாடு என்னை வளர்த்த மொழி இவற்றிற்கு எந்த வகையிலாவது என்னுலான ஒரு நல்லதை செய்தாக வேண்டும்.

எம்மை நிலையில், இக்கட்டான இவ்வேளையில், நாடே கொந்தளித்துக்கொண்டிருக்கும் இத்தருணத்திதில் எமது எண்ணங்களை எமது கருத்துக்களை- எமது அனுமானங்களை ஏன் எமது ஆக்கங்களை, இந்த நாட்டுக்கும் (நாட்டு மக்களுக்கும் நாட்டுத் தலைவர்களுக்கும்,) உலகுக்கும் எடுத்துச் செல்ல, எடுத்துச் சொல்ல இப்போதைக்கு இதைவிட ஒரு இனிய, வலிய சாதனம் வேறெதுவும் இருக்குமென்று நான் எண்ணவில்லை

'தேச பக்தனின் உடல் சிந்தும் இரத்தத்தை விட அறிவாளியின், (எழுத்தாளனின்) பேனா சிந்தும் மை புனிதமானது'' என்பது ஒரு அறிஞனின் அனுபவத்தாலான அழகு தத்துவமாகும். எனவே நம் சமுதாயத்திற்கும், நம்மை வளர்த்து ஆளாக்கிய மொழிக்கும் எமது மண்வாசனையோடு கலந்த நல்ல ஆக்கங்களைத் தர, இப் புத்தம் புது ரோஜாவோடு புது மணம் தர புறப்படுவோமாக!

வாரீரோ நண்பர்களே! பழைய தோழர்களே!

நன்றி!

—மருதூர்மஜீத்ஜான்—

## வேண்டவே வேண்டாம் நமக்கொரு கொடுமை நிறை எதிர்காலம்!

**ஜப்பானின் ஹீரோசிமா அணுகுண்டு அனர்த்தங்களை நேரில் பார்த்து அவதியுற்ற ஒரு வயதுப் பாட்டியின் கண்ணீர் அனுபவம் இதோ:**

அணுகுண்டு யுத்தத்தின் (2வது உலக மகாயுத்தம்) 43வது வருட ஞாபகார்தம் அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் கடந்த ஆகஸ்ட் 88ம் வருடம் ஆயிரக்கணக்கானோரால் சோகமாக நினைவுகூறப்பட்டது. அதில் கலந்துக் கொண்ட 73 வயது நிரம்பிய மசாயோ நாகோ என்ற மேற்படி பெண்மணி கூறியதைக் கேட்டு கூடியிருந்தோரே கண் கலங்கினர்,

, அன்று 9. 8. 1945, நான் காய்கறி வாங்குவதற்காக கடைத் தெருவுக்குச் சென்றேன், அப்போதுதான், அந்தப்பெரும் அனர்த்தம் நேர்ந்தது, ஆம்! அணுகுண்டே வெடித்தது,

வானமே முழுவதுமாக, முழு கருமுகிழாக புகையால் மண்டிவிட்டது, என் உடம்புகளுள்ளே இனம் புரியாத ஒரு வலி ஏற்பட்டுவிட்டது, பச்சை நிறமான எனது அழகான உடைகள் கருப்பு நிறமடைந்துவிட்டன, அத்தோடு எனது கையிலிருந்த குடையோ நெருப்பால் எரியத் தொடங்கி விட்டது. போதாதற்கு எனது கையிலிருந்தப் பையும் தீப்பற்றிக் கொண்டது. நான் மயக்கமடைந்து திரும்பவும் நினைவுகொன்டு பார்க்கும் போது எனது வாயிலிருந்து இரத்தம் இரத்தமாக வந்து கொண்டிருந்தது,

எனது கணவரோ கொடிய அணுக்கதிர்களால் தாக்குண்டு அடுத்த வருடமே இறந்துவிட்டார். ஆனல் நானே அடுத்து வந்த 35 வருடங்களிலும் பலதரப்பட்ட நோய்களுக்குள்ளாகியிருந்தேன்,

இது எமக்கெல்லாம் ஒரு முக்கியமான காலம், நாம் எம்மைப்பற்றி, எதிர்காலத்தைப்பற்றி சிந்திப்போம்; அணுகுண்டையும் அணுவாயுதத்தையும் இவ்வுலகிலிருந்து நீக்குவோம்! அமைதியைப் பேணுவோம்! இல்லையேல் எமக்கில்லை ஒரு எதிர்காலம்,':

நன்றி., ஒரு ஆங்கில தினசரி.

'அண்ணாந்து பார்க்கின்ற மாளிகைக் கட்டி அதன் அடியினில் ஓலையில் குடிசை கட்டி பொன்னுனை உலகென்று பெயருமிட்டால் இந்த பூமி சிரிக்கும் அந்த சாமி சிரிக்கும்'.

பலஹீனமான மனிதனுக்கு இப்படியும் ஒரு விசித்திர ஆசை. ஆனால் அதன் விளைவு?...

'ஜப்பான் போர்க் கொள்கையை மேற்கொள்ளாவிடில் கிழக்காசியாவில் நிலவிவரும் சிரமங்களை அதனால் போக்கமுடியாது! சீனாவை நமது ஆட்சியில் கொண்டு வர வேண்டுமானால் அமெரிக்காவை முதலில் அழித்திடவேண்டும்.... சீனாவைகைப்பற்றவேண்டுமானால் முதலில் மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் கைப்பற்ற வேண்டும். உலகைச் கைப்பற்றவேண்டுமானால் முதலில் சீனாவை நாம் வெல்ல வேண்டும்.... சீனாவின் மூலவளங்களனைத்தையும் நாம் கைவசப்படுத்திவிட்டால் பின்னர் இந்தியா. ஆசியா மைனர் மத்திய ஆசியா ஏன் ஐரோப்பாவைக்கூட வென்று விடலாம். எனவே எமாத்தோ இனத்தார் (அதாவது ஜப்பானிய இனத்தார்) புகழ்பெறவேண்டுமானால் முதலில் மஞ்சூரியாவையும் மங்கோலியாவையும் கைப்பற்றவேண்டும்.

(1927ம் ஆண்டு ஜூலை மாதம் 25ம் திகதி ஜப்பான் பேரரசுக்கு தலைமை அமச்சர் பாரன் தனக்கா எழுதியனுப்பிய கடிதம்.)
ஆதாரம்; பன்னாட்டு அரசியல் பாகம்2.

---

ஒரு பெண்ணின் பலஹீனத்தைப் பார்க்க வேண்டுமா? அவளை ஒரு நிலைக்கண்ணாடி முன்னே நிறுத்து. ஓர் ஆணின் பலஹீனத்தைப் பார்க்க, அவனிடம் ஓர்இளம் பெண்ணைக் காட்டு.

---

● சிறுபிள்ளைகளுக்கு அடிக்கடி இருமலும்சளித்தொல்லையும் ஏற்படும்போது மிக இலகுவான ஒரு கைமருந்தை உபயோகிக்கலாம். ஆடாதோடை இலையின் சாறு10 முதல்20துளிவரை எடுத்து தேனுடன் கலந்து கொடுத்தால் சளி வெளிப்பட்டு இருமல் குறையும்

---

உலகம் நல்லதுதான் உழுத்தவர்கள் உள்ளாடாதவரை,

---

● இந்தியர்களது உணவிலே குறிப்பாக, தமிழர்களின் உணவிலே இட்டிலிக்கொரு தனிச்சிறப்பு உண்டு. அதன் சிறப்பை பற்றி மேற்கு நாட்டர்கள் எத்தனையோ விதமாக வர்ணித்துள்ளார்கள் இங்கே- இந்தியாவில், சில காலம் தங்கிய ஓர் அமெரிக்கர் 'இட்டிலி என்பது ஓர் சிறந்த சிற்றுண்டி சாம்பார் எனும் கடலில் இட்டிலி ஓர் நீர்மூழ்கி போல் ஒழிந்து கொண்டிருக்கிறது' என்று ஒரு பத்திரிக்கையில் எழுதியிருந்தார். இதோ இன்னொரு கேலிப் பாடலுங்கூட:

இட்டிலியென்பது இனியஉணவு மற்றதனை ஒட்டி நுகர்வது சாம்பார்.

யாரோ-

---

திரு. வி. பி. கணேசனின் பார்வையில்:-



# நிமிர்ந்து நிற்குமா நம் உள்ளூர் சினிமா?

குணப்படுத்த முடியா 'குப்பனு'மல்ல, சீக்குப் பிடித்த நம் 'சித்தனு'மல்ல, தோஷம் பிடித்த 'தொத்தனு'மல்ல, வயதுப்போன 'வத்தனு'மல்ல நமது ஈழத்து சினிமா. இருந்தும், போதிய ஊட்டச்சத்து இல்லாததால் கை கால்களை நீட்ட முடியாது குப்புறப்படுத்து நீண்ட தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் அதனை தட்டியெழுப்பி உற்சாகப்படுத்த இன்று நல்ல டாக்டர்களும், ஏன் டானிக்குகளும் மலிவாக இருந்துங்கூட,,,,,, ஆம் எல்லாத் துறைகளிலும் திறமைமிகு உள்ளூர் கலைஞர்கள் இருக்கும்போது அதனைப் பற்றிய ஒரு முயற்சியில் ஏன் இறங்கக்கூடாது? என்று, அத்துறையிலே அனுபவமுள்ள, பல சினிமாக்களில் கதாநாயகனாக நடித்துவிட்ட - அதுவும் ஈழத்து சினிமா என்றால் முதலில் எமது மனதில் படுகின்ற திரு வி. பி. கணேசன் அவர்களை அணுகி வினவியபோது, அவர் பெருமையுடன் இது சம்பந்தமாக தம் கைப்படவே விளக்கமாக எழுதித் தந்த ஒரு கட்டுரையை இந்தப் புது ரோஜாவில் பிரசுரிப்பதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

'இலங்கையில் தமிழ் திரைப்படதயாரிப்பு 35 மி மீ 'தோட்டக்காரி' என்ற முதலாவது திரைப்படத்துடன் ஆரம்பமானது. அதற்கு முன்பு 'சமுதாயம்' என்ற 16. மி. மீ படம் வெளிவந்ததென்றாலும், பொதுமக்கள் பார்க்கக்கூடிய முறையில் 'தோட்டக்காரி'யையே முதலாவது திரைப்படமாக எடுக்க வேண்டும்.

அதற்குப் பிறகும் பல தமிழ் திரைப்படங்கள் வெளியாயின. ஆனால் படமெடுக்க கால தாமத மேற்பட்டதாலும், வியாபார ரீதியில் படமெடுக்கப்படாததாலும் அவை ஜனரஞ்சகமான படங்களாக அமையவில்லை. 1975ல் 'புதியகாற்று' வெளிவந்தபோது தமிழ் சினிமாத் துறையில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. இலங்கையில் தரமான திரைப்படம் தயாரிக்கலாம் என்ற எண்ணம் பலர் மனதில் ஏற்பட்டு பல படங்களும் வெளிவரலாயின. அவற்றில் குறிப்பிடத்தக்கவை; கோமாளிகள், ஏமாளிகள், நான் உங்கள் தோழன், வாடைக்காற்று, பொன்மணி, அநுராகம், மாமியார் வீடு, காத்திருப்பேன் உனக்காக, நாடு போற்ற வாழ்க ஆகியவையாகும்.

1980ல் 'நாடுபோற்ற வாழ்க' வெளிவந்தப் பிறகு குறிப்பிடும்படியாக எந்தவொரு தமிழ்படமும் வெளியாகவில்லை, தயாரிப்பில் சில படங்கள் இருந்தப் போதிலும் 1983ல் நடந்த இனக் கலவரத்தின் பின் எவரும் இத்துறையில் ஈடுபட முன்வரவில்லை.

இதுவரை வெளிவந்த படங்களின் வசூல் முறையை அவதானிக்கும் போது வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்நகரில் வசூலாகும் தொகை கிட்டத்தட்ட 50 சதவீதமானதாக இருந்திருக்கிறது, எனவே, யாழ்ப்பாணத்தின் வசூல் 50 சதவீதமும் கிழக்கு மாகாண வசூல் 15ச த வீதமும் மொத்தம் 65 சதவீத வசூல் இல்லாவிடில் உள்ளூர் திரைப் படங்கள் வியாபார ரீதியில் எடுபடாது என்பது தெரிகிறது. வடகிழக்கு பிரச்சினை நீங்கி அங்கு அமைதி ஏற்படும் பட்சத்திலேயே எதிர்காலத்தில் இலங்கையில் தமிழ் திரைப்படங்கள் தயாரிக்க முடியும்.

தென் இந்திய தமிழ் திரைப்படங்களினால். இலங்கை தமிழ்ப் படங்கள் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தாலும் அதை பெரிய குறையாக கூற முடியாது. தரமான தென் இந்திய படங்களையே மக்கள் பார்க்க விரும்புகின்றனர், எனவே இலங்கையிலும் சிங்களப்படங்களைப் போல யதார்த்த ரீதியில் தமிழ் திரைப்படங்களை தயாரித்து தென் இந்திய படங்களுடன் நாம் போட்டிப் போட்டிருக்கலாம்.

எதிர் காலத்தில் மீண்டும் நிலைமை சாதகமாக அமைந்தால் இது நடைமுறையில் சாத்தியமாகும். நம்பிக்கைக்கு இடமுண்டு,'

புதிதாக மலரும் ரோஜாவே!

உன்னை வாழ்த்த எமக்கும் நல்ல மனமுண்டு.
உன்னை உற்சாகப்படுத்த எமக்கும் ஒரு கடமையுண்டு.
மலர்ந்து வருவாயாக! நல்மணம் தருவாயாக!

நியூ சந்திரா ஜுவலர்ஸ்

305, செட்டியார் தெரு,
கொழும்பு 11

தரமான நகைகளுக்கு ஆடர் செய்து பெற்றுக்கொள்ள
தலைநகரில் ஒரு ஸ்தாபனம்
நியூ சந்திரா ஜுவலர்ஸ்

இருபக்க சிறுகதை!

# லட்சுமி

ராஜேந்த்.

உயிரற்ற லட்சுமியின் உடலைச் சுற்றி ஜனக்கூட்டமோ ஈக்களாய் மொய்த்து நின்றது. பண்ணையார் பரமசிவமோ தன் உணர்ச்சிகளை அடக்க முடியாது சோர்ந்து, சோர்ந்து விழுந்துக்கொண்டிருந்தார், மூத்தவன் பாலுவோ அழுதழுது கன்னமிரண்டும் வீங்கியிருந்தான், அவன் தங்கை மீனுவோ, அத்தாயின் பிரிவைத் தாங்க முடியாதவளாய் கதறிக் கொண்டிருந்தாள். சுற்றி நின்றக் கூட்டமோ, அக்குடும்பத்தின் சோக உணர்வுகளோடு தன்னைக் கட்டுபடுத்த முடியாதுகண்களிலே நீரை வழிந்துக் கொண்டிருந்தது.

அந்த உயிரற்ற உடலுச்குப் பக்கத்திலே எரிந்துக் கொண்டிருந்த குத்து விளக்கு, புகைந்துக் கொண்டிருந்த சாம்பிராணி, ஊதுவத்தி, குப்புறக் கிடந்த வெற்றிலை அனைந்துங்கூட லட்சுமியைவிட்டு பிரிய முடியாத தாய் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தன. லட்சுமியின் பிணக்கோலத்தைக் கண்டு சகிக்க முடியாத அவ்வீட்டு உள்ளூர் தெய்வங்கள்கூட பிரேம் போட்ட சட்டைக்குள்ளிருந்து மறுபக்கம் திரும்பி விசும்பிக் கொண்டிருந்தன.

குளித்து முழுகி, புதுக்கோலம் பூண்டு மணப்பெண் கோலந்தோடு இறுதி ஊர்வலத்திற்காக காத்திருந்தாள் லட்சுமி. அவளது அந்த துடிப்பிழந்த முகத்தில் கூட ஓர் இனம் புரியா கலை. ஒரு வேதனை.

சகல சம்பிரதாயப்படி பெரியோர்கள் பரமசிவம் பண்ணையாரை வைத்து லட்சுமிக்கு பூ முடித்தார்கள், பொட்டு வைத்தார்கள், சந்தனத்தை உடம்பெல்லாம் பூசச் செய்தார்கள். சுற்றி நின்ற கூட்டமோ, கண்கொட்டாமல் அனைத்தையும் பார்த்துகொண்டிருந்தது. இறுதியில் எங்கோ மூலையில் இருந்த ஒருவர் மட்டும், ''பூ முடிசாச்சி, பொட்டு வச்சாச்சி, தாலியை அறுத்துவிட்டு சீதேவியையும் வாங்கிட்டு சவத்தை எடுக்க வேண்டியதுதானே ஏன் சொணங்குறீங்க.'' அவசரப் படுத்தினர்.

அனைவருமே 'ஷாக்' அடித்ததைப் போல் 'தாலி வாங்குவதா? அதுவும் மாட்டுக்கு தாலி வாங்குவதா? மாட்டுக்கு யாராவது தாலி-கட்டியிருந்தாத்தானே அதை அறுப்பதற்கு?' இன்னும் ஏதேதோ கூறிக் கொண்டிருந்தனர்.

''தாலி,...தாலி இருபது வருஷத்துக்கு முன் என் லட்சுமி இறந்தப் பழது அவப் பெயரை இவளுக்கு இட்டு, அவத் தாலியை நான் இவ நக்கு கட்டி.....அதோ இவளுட்டு கழுத்தைச் சுற்றியுள்ள வெள்ளைத் துணிக்குள் இருக்கின்றது அதப் பாருங்க..'' ஆவேசமாகக் கத்தினர் பண்ணையார்.

அதே வேகத்தோடு ஓடி வந்த நாவிதன் தங்கமுத்து லட்சுமியின் கழுத்தைச் சுற்றியிருந்த வெள்ளைத் துணியைப் பிரித்தான். அங்கே ...' அந்த பொன் தாலி இன்னும் அழகாய் மின்னிக் கொண்டிருந்தது. குழுமி இருந்த அனைவருக்குமே பெரும் ஆச்சிரியம்,, வியப்பு.

இறுதிக் காரியமாக பண்ணையாரால் லட்சுமியின் கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த அந்த பொன்தாலியும் கழற்கப்பட்டுவிட்டது. கட்டையாக மரத்துப் போய்விட்ட லட்சுமியின் முன்னங்காலை (வலது) இருவர் தூக்கிப் பிடிக்க லட்சுமியால் இறுதியாக இடப்பட்ட சாணத்தைக் கொண்டே பின் திரும்பி தன் மாமியாராக்கப்பட்டுவிட்ட லட்சுமியிடமிருந்து சீதேவியை வாங்கி கொண்டிருந்தாள் பாலுவின் இளம் மனைவி கீதா.

''கோவிந்தா, கோவிந்தா'' சுற்றி நின்றக் கூட்டமோ மாயவன் கிருஷ்ணனை அழைக்க லட்சுமியின் உடலைத் தூக்கி கட்டையில் வைத்தார்கள் சில ஆண்கள்.


''ஐயோ அம்மா நீ போறயா... எங்களை விட்டே போறயா நான் பிறந்த தோஷந்தால் எங்கம்மா சாக, உன்னைத்தானே அன்னையில இருந்து அம்மான்னு அழைச்சேன், உன் பாலக் குடிச்சுத்தானே நான் வளந்தேன், அம்மா எங்களைவிட்டு நீ போறயா,....'' அலறிக் கொண்டிருந்தான்,, பாலு, தினறிக் கொண்டிருந்தாள் மீனா, வெளிறிக் கொண்டிருந்தார் பண்ணையார்.

---

அடுத்த இதழில் ஆரம்பமாகின்றது

பிரியன் எழுதும் **அவர்கள்** மர்மம் நிறை தொடர் கதை

---



கல்கி
15.4.2001
குருவாயூர் கிருஷ்ணன்
129

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# அவன் கண்ட உறவு!


**லட்சுமிமைந்தன்**

'சாமி பிச்சை'!

கணீரென்ற குரல் வந்த திசையை நோக்கி ஒரு கணம் திரும்பிப் பார்த்தான் இளைஞன் ரகு!

அழுக்கு நிறைந்த ஆடைகளோடு அடக்கமே உருவாய் துண்டிக்கப்பட்ட ஒரு அரை காலுடனும் அந்த ஆலயத்து சுவரருகே, அமர்ந்திருந்த முனியனைக் கண்டு உண்மையிலதிர்ந்தே போனான் ரகு! ஒரு நிமிடம் அவனையே மேலிருந்து கீழ்வரை ஏற இறங்கப் பார்த்த ரகு தன்னையறியாமலேயே சட்டைபாக்கட்டுக்குள் கையைவிட்டான். முந்திக்கொண்டு ஓடிவந்த ஐந்து ரூபா நாணயமொன்றையெடுத்து அந்த தகரடின்னுக்குள் போட்டப்போது அது ,டாங், கென்று நீண்ட ரீங்காரமிட்டு ஒலித்தது.

முனியனது மனதுக்குள் ஒரு பெருமகிழ்ச்சி 'கோடி புண்ணியமுங்க' என்று அந்த பிச்சை தன் அகன்ற



டேய் நம்ம குமார் பார்வைக்கு அசிங்கமா இருந்தாலும் முகத்துக்கு 'பவுடர் போட்டுட்டா அழகா இருக்கான்ல கவனிச்சியா?

ஆமாண்டா நானுங்கூட இப்பத்தான் கவனிச்சேன்: பவுடர் போட்டுட்டா பயஎம்பம் பண்ணுன மையம் ராமதிரியேதான்

வாயை திறந்துக் கூறியப்போது ரகு உண்மையில் பெருமிதமடைந்தான், ஏன், உடம்பும் புல்லரித்துப் போய்விட்டான் என்றால் மிகையாகாது.

அஞ்சு சதத்தையும் பத்து சதத்தையுங் கண்ட என் பிச்சை வாழ்க்கையில் முதன்முறையாக இந்த அஞ்சு ரூவாவ பார்த்தது என் மனசுபோல இந்த தகர டின்னுக்கும் பொறுக்கல சாமி அதுனாலத்தான் அதும் தன்னை மறந்து பெரிய சத்தம் போட்டிடுச்சி' என்றவன், தன்னையும் மறந்து ஹஃ ஹஃ என்று சிரித்தேவிட்டான்.

''ஆமா சாமி உங்களைப்பார்த்தா பெரிய மனுசன் பிள்ளைமாதிரி இருக்குது உங்களுக்கெப்படி இந்த ஏழையிடத்தில் இப்படி ஒரு கருணை வந்து...? என்றவன் ரகுவின் அழகு முகத்தையே உற்று நோக்கி'கொண்டிருந்தான்.

ஆனால் முனியனது அந்த வார்த்தையானது ரகுவின் மனதுக்குள்ளே ஆயிரம் இடி மின்னல்களை உண்டு பண்ணியது. இருந்தும் தன்னை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு'' 'ஆமாம்மா! நான். . . . . .
பெரிய மனுசன் பிள்ளைதான் அதை பிறகு வந்து சொல்கிறேன்' என்றவன் கைக்கடிகாரத்தை ஒருமுறை பார்த்தான். அதுவோ நேரம் காலை எட்டு,பத்து என்பதை காட்டிக் கொண்டிருந்தது'

பதட்டத்துடன் தன்னை சரி செய்துக் கொண்டு 'ஓ! உன்னோடு பேசியதில் எனக்கு நேரம் போனதே தெரியவில்லை. உன்னை பிறகு வந்து பார்க்கிறேன்' என்றவன் ஆபிசை நோக்கி தாவி ஓட லானான்.

அரைமைல் தூரத்தை தன் கால்கள் ஆரடித் தூரமாக எண்ணி பாய்ந்து ஓடினாலுங்கூட அன்று அவனது மனது மட்டும் அந்தப் பிச்சை முனியனைப் பற்றிய சிந்தனையாகவேயிருந்தது, அதிலும் அவன் கேட்ட அந்த 'பெரிய மனிதனின் பிள்ளை....'. அது ரகுவின் மனதிற்குள்ளே ஒரு பெரும் உந்தலாகவே தோன்றியது போதாதற்கு அரை காலுடன் அவனைக் கண்டது என்னவோமனதிற்குள் பெரும் வேதனையையுண்டு பண்ணியது. அதனால் அன்று அவனால் ஆபிசில் உருப்படியாக வேலை செய்யவே முடியவில்லை அன்று முழுதும் அவனைப்பற்றிய சிந்தனையிலேயே ஆழ்ந்திருந்தான்

ரகுவை பொறுத்தவரை பிச்சைகாரர்களது பாத்திரத்தில் போடுகிற நாணயமும் ஆண்டவனது கோயில் உண்டியலில் இடுகின்ற காணிக்கையும் ஒன்று என்பதே அவனது. அசைக்கமுடியா கணிப்பாகும். அதனால் தானே என்னவோ! அவன் தெய்வத்தை வணங்கவேணடும்மென்று அதிகமாக கோயிலுக்குச் செல்வதேயில்லை. கோயிலில் தரிசிக்கின்ற இறைவனை விட வீதியில் நிற்கின்ற பிச்சைக்காரர்களை பார்ப்பதிலும் அவர்களது பிச்சைபாத்திரத்தில் ஐந்து சதத்தையாயினும் போட்டுவிட்டு வருவதில். அதன் மூலம் அவர்களது வாய்மொழிவிருந்து கிடைக்கும் ஆசீர்வாதத்தையும் பெரும் பாக்கியமாக மதிக்கின்றான்போலும் ரகு' அதனால் அவனது நண்பர்கள் அவப் பார்த்து செய்யும் கேலி, கிண்டல்களையுங்கூட என்றுமே அவன் பெரிதுபடுத்தியதுமில்லை.

'பெரிய மக்கள் தொண்டனும், மக்கள் தலைவனும் மக்கள் திலகங்கிற நினைப்பு போல.....' இப்படியெல்லாம் சக ஆபிஸ் நண்பர்கள் அவனைப்பார்த்து 'நக்கல்' செய்வது அன்றாட வழக்கமாக விட்டது. என்றோ தனிமையிலிருக்கும் போது தன்னையறியாமல் வழிந்தோடும் கண்ணீர்த் துளிகளை துடைத்துக்கொண்டு தன்னைப் பற்றிய யோசனையில் ஆழ்ந்துவிடுவான். சிறு வயதிலேயே பெற்றோரை இழந்து சிற்றப்பா ஒருவரது உதவியால் உயிர் வாழ்ந்து




1. அண்ணே அந்த ஆட்டுக்குட்டி ஏன் மேசையில டீவிக்கும் ரேடியோவுக்கும் இடையில படுத்துக்கிட்டு இருக்கு?

2. ஓ! அதுவா? நேத்து ராத்திரி வீடியோவில ஆட்டுக்கார அலமேலு படம் பாத்திச்சி அதில இருந்து நான்தான் டீவியையும் ரேடியோவையும்ஆப்பரேட் பண்ணுவேன்னு அடம்புடிச்சிகிட்டு அந பக்கத்திலேயே படுத்துக்கிடக்கு

நெகடிவ்வையும் பொசிடிவ்வை'யும் போன்றதுதான் வறுமையும் புலமையும் இரண்டும் ஒன்று சேரும்போது அதன் பிரதிபலிப்பே வேறுதான்

கவிதை:

# வாழ வழி வேண்டும்.

இலண்டன் சீமையிலிருந்து வந்து
தேயிலைத் தோட்டத்தை
நோட்டம் பார்த்த- வெள்ளை
சீமான் துரைக்கு- தேயிலைத்
தோட்டத்துத் தேரியிலே
சிலை வைத்து ஆராதிக்கிறது
ஒரு கூட்டம்,
தாங்கள் சீவிக்க வழியின்றி
பாய் மரக் கப்பலேறி
தாய் நாடு விட்டு இங்கே
கண்டிச் சீமைக்கு கால்நடையாய் வந்து
காடழித்து களனி செய்து
பெருந் தோட்டம் வைத்து
பெருமதியாய் மிளிரச் செய்தோம்,
அதனால் தான் – நாங்கள்
எங்கள் தொழிலாளர் வர்க்கத்தை
சிலை செய்யச் சொல்லவில்லை,– மாறாக
மலையேறி மாடாய் தினம்
மண்ணோடு மாழும் எம்மை
பெருமதியை உணர்ந்து - பெரும்
உரிமை தந்து - சுதந்திர பிரஜைகளாய்
பிழைக்க விட்டால் போதும்

ஸ்பிரிங்வெளி எஸ். கே, ராஜரத்தினம்.

.இதயத்தில் இரக்கம் நிறைந்தவனாய். தனக்கு அடியில் இருப்பவர்களில் 'பலவீனமானவர்களைத் தனது தோள் மீது சுமப்பவன் தலைவன்'

து.பாலசுப்பிரமணியம், இந்துக் கல்லூரி, கொழும்பு.

நகைக் கடை ஒன்றில்:

முதலாளி; அடே பயலே நகைப் பெட்டி செஞ்சிகிட்டு வருவானே அலிகோஸ் அவனுக்கு என்னடா ஆச்சு மிச்ச நாளா கடை பக்கமே காணும்?

பையன்; அவன் இனி வரமாட்டானுங்க முதலாளி ஏன்னா அவனுக்கு வேறொருத்தன் பெட்டி செஞ்சிட்டான.




அவன்; என்னங்க அவரு கல்யாணத்துக்கு அவ்வளவு பெரிய பார்சலா தூக்கிட்டுப் போறாரு?

இவன்! வேறொன்னுமில்லைங்க,.... குளிக்கிற பேரல்தான். எல்லாமே ஒரு கௌரவமா இருக்கட்டுமே!

## 'மினி நியூஸ் பிளஸ் மினி கொமன்ட்'

● கிழக்கு ஐரோப்பிய நாடுக ளுடனான (கம்யூனிஸ) அமெரிக்க உறவு, ரஸ்யாவின் புதிய ஜனநாயகப் பாதை, சீனாவில் மாணவர் ஜனநாயக உரிமைக் கோரல் .... தொழிலாளரை முன்வைத்து .... 'டிமான்ட்' கேட்ட தொழிற்சங்க பிரமுகர்கள் இன்று ...... அரசு ஊழியர்களின் 'டிமான்டி'ற்காக முகங்கொடுத்தல், இத்தியாதி, இத்தியாதி. - செய்தி

இத்தனையும் நம் கண்முன்னே நடக்கும் உண்மைகள். ஆனால் சந்தோஷப்பட வேண்டியவை காலத்தால் மாற்றம் பெறவேண்டியவை. அம்மாடியோவ் சூரியன் மேற்கே உதித்தாலும் உதிக்கலாம்.

● ஒன்றுக்கப்பட்டுவிட்ட அ. தி. மு. க. வில் விரப்பனும் சேர விரும்பம் தெரிவித்துள்ளார் -செய்தி.

இன்றைய உலகிலே மனித வியாபாரம் அரசியல் ஒன்றுதான் என்பதை ஏற்கனவே காளிமுத்து தெளிவாக்கிவிட்டார். அதனை வீரப்பன் உறுதி செய்கின்றார் போலும்.

● அப்பாவின் சொத்தில் பெண் பிள்ளைகளுக்கும். சரிப்பங்கு. - தமிழக அரசின் புதிய சட்டப் பிரேரணை - செய்தி.

கருணாநிதி கருணையோடு செயல்பட முற்பட்டு விட்டாரோ?

● ''நோய்வாய்ப்பட்டப் பிறகு ஜெயலலிதாவை இப்போது காணக் கிடைக்கவில்லையே?'' என்று ஒரு நிருபர் முன்னால் அமைச்சர் ஒருவரிடம் வினவ அவரோ, 'இந்தியாவில்தான் இருக்கின்றார்' என்று சூடாக பதில் கூறினாராம். - செய்தி

திராவிட பாரம்பரியத்தில் வளர்ந்தவரல்லவா? வசன நடை துள்ளி விளையாடும் தானே.

● போக்குவரத்து தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் பாதிப்புற்ற இங்கிலாந்துமக்கள் 'தேம்ஸ்' நதியினூடாகப் படகுகளில் பிரயாணம் செய்து நீண்ட தூரத்தை அடைகின்றனர். - செய்தி

நம் நாட்டு மக்களும் ஒரு வேளை களனியையும் மகாவலியையும் முறைத்துப் பார்த்துக் கொண்டிக்கின்றார்களோ என்னவோ?

● பிரித்தானியாவில் தொழிற் கட்சியின் செல்வாக்கு அண்மையில் உயர்ந்துள்ளது. - செய்தி

ஒரு மாமாங்கத்தை (ஒரு மாற்றத்தின் எல்லைக் காலம்) எட்டிப் பிடித்துக் கொண்டிருக்கின்றார் அல்லவா மார்கிரட் தட்சர்.

கஸ்டப்பட்டு பத்துவரைப் படித்து தன் முயற்சியால் எப்படியோ இன்று அந்த ஆபிஸில் உதவியாளர்க்காக வேலைக்குச் சேர்ந்து விட்ட துரதிஸ்டமோ என்னவோ, தன்னை வளர்த்து ஆளாக்கியவரும் நோயால் பீடிக்கப்பட்டு மண்டையை போட்டு விட்டாரென்றால் அவனது இளமனது என்ன பாடுபட்டிருக்கும்? நிலைதான் என்னவாயிருக்கும்?


உறவென்று சொல்லிக்கொள்ள வேறொருவரும் இல்லாதப்போது தன் கொள்கைக்கு ஒத்துவராத சகாக்களை, உற்ற நண்பர்களாக ஏற்றுக்கொள்ள முடியாதப்போது அந்த பிச்சைக்கார பிரமுகர்களை தன் வாழ்வின் உற்றாராய் உறவினராய் நண்பர்களாய் மனத்தளவில் ஏற்றுக்கொள்வதில் தப்பேதும் இல்லைதானே என்று தனக்குத்தானே கேட்டு கொள்வான். அதனால் யாருமற்ற அந்த ஏழைகளுக்கு தன்னாலான உதவிகளைச் செய்வதில்- அதிலும் அரைகுறை காலுடன் நிற்கும் முனியனுக்கு தன்னால் முடிந்த அனைத்து பணிகளையும் செய்வதில் பெரும் திருப்தியைக் கண்டான் போலும், இளைஞன் ரகு! அன்று ஆபீஸ் விடுமுறையாதலால் ஆறுதலாக முனியனோடு கதைத்துக் கொண்டிருந்தான் அவன்.

அநாதைக்குத் துணை அநாதைதானே என்பது போல ரகுவின் சோகக் கதையைக் கேள்வியுற்ற முனியன், தானும் அதிலுருகி தன் கண்ணீர்க் கதையை ரகுவிடத்தே விபரித்தப் போது ரகு உண்மையில்

தொடரும்

அதிர்ந்தேவிட்டான். முனியனுக்கு நிகழ்ந்த சம்பவத்தால், கதையால் ரகு முனியனோடு ஒன்றியே போய்விட்டான், தனது முன்னைய வாழ்வைப்பற்றி கூறிய லாவகம், நயம் அனைத்திலும் ரகு, வியந்தே போய்விட்டான்.

'தம்பி! ஒரு காலத்தில் அதாவது சுமார் பத்து வருடப்துக்கு முன்னே இலங்கைய ஆஹா? ஓஹோ ரன்னு



'ஆட்டிப்படைச்சதே ஒரு 'கந்தப்பா சர்க்கஸ் கம்பனி', அதைப் பத்தி கேள்விபட்டிருப்பீங்கன்னு நினைக்கிறேன். எந்த ஒரு சார்க்கஸ் கம்பனியாலேயும் அதுவரைக்கும் செய்ய முடியாத அத்தனை விளையாட்டுகளையும். தன் வயம் கொண்ட ஆட்டக் காரர்களின் கை தேர்ந்த கலையால் ஆட்டிப்படைத்து, நாட்டு செல்வத்தையே

# கௌரவிப்போம் கவியரசரை.

கண்ணதாசனின் படைப்புக்களோ ஒரு பெரும் ஜீவ நதி! அதிலிருந்து ஒரு சிறு கிண்ணம் ஜலம் மொண்டு துளிர்விடும் இந்த ரோஜாவுக்கு ஊற்றி, உயிர்கொடுப்பதில் நாமும் பெருமை யடைவோமாக!



நாற்பது வயதை நீ தாண்டி விட்டால் இதற்கு முன்னாலே விளைவித்த பயிர்களை எல்லாம் அறுவடை செய்ய வேண்டியிருக்கும்.

அந்தநாள் உணவு, ஆட்ட பாட்டங்கள் இவற்றின் எதிரொலி இப்போது தான் கேட்கத் தொடங்கும்.

இதற்கு முன்னால் மது அருந்தும் பழக்கம் இருந்திருக்குமானால், இப்போது உன் ஞாபக சக்தியை மெது மெதுவாக மேகங்கள் மூடும். இதற்கு முன்னால் கல்லும் உனக்கு ஜீரணமாகி இருக்கும். இனி அரிசியும், பருப்புமே உன்னோடு சண்டை போடும். இதற்கு முன்னால் எதையும் சாப்பிடலாம் என்று நீ டாக்டரை கேட்டிருக்க மாட்டாய்; இனிக் கேட்க வேண்டியிருக்கும்.

முந்திய அத்தியாயங்களில் குறிப்பிட்டிருப்பதைப் போல், இதுவரை கீழ்க் கண்ட விஷயங்களை நீ கவனித்து வந்திருந்தால், இந்தப்பருவமும் உனக்கு இளமைப் பருவமே! — கைகள் இரண்டையும் வீசியபடி முடிந்தவரை

நீண்ட தூரம் நடத்தல், வாய்வுப் பதார்த்தங்களைச் சாப்பிடாமல் இருத்தல், கடலை மாவு. கடலை எண்ணெய் ஆகியவற்றை ஒதுக்குதல்,

தவறான உடல் உறவுகள் கொள்ளாதிருத்தல், விழுந்து குளித்தல். இனம் அறிந்து சேருதல், இருதயத்திற்குத் துன்பம் கொடுக்கக்கூடிய தொல்லைகளில் மாட்டிக் கொள்ளாதிருத்தல், எதையும் அளவோடு வைத்திருத்தல், — நாற்பது வயதுவரை இவற்றை ஒருவன் கடைப் பிடித்தால், இப்போது அவனைப் பார்க்கிறவர்கள், 'உங்களுக்கு இருபத்தைந்து வயதா?' என்று கேட்பார்கள். ஆயுள் எவ்வளவு என்று நிர்ணயிப்பது நம்கையில் இல்லை. ஆனால் ஆயுள் உள்ள வரை ஓடியாடிச் கொண்டிருக்கும் வித்தையில் நம்முடைய திறமையும், முயற்சியும் கூட அடங்கிக்கிடக்கின்றன.

தசரதன் அறுபதாயிரம் மனைவியரை மணந்தது உண்மையோ இல்லையோ, அவனது வரலாற்றையும் அவன் ஆண்மை காத்ததையும் படிக்கும் போது, ஒரு ஆயிரம் மனைவியரையாவது திருப்தி செய்யக் கூடிய சக்தி அவனுக்கு நீண்ட காலம் இருந்திருக்கிறது என்பது புலப்படுகிறது: மனதறிந்து புராணத்திலோ, இதிகாசத்திலோ நல்ல பாத்திரங்கள் துன்பங்களை வரவழைத்துக்கொண்டதில்லை. தானே வரும் துன்பங்களை, 'அவனவன்கர்மா' என்பார்கள். பகவானே கூட அவற்றைத் தவிர்க்க முடிந்ததில்லை.

மீண்டும் உதாரணத்திற்கு ராமாயணத்தையும், பாரதத்தையும் தான் நயம் திறக்க வேண்டியிருக்கும். ஆகவே நாற்பதாவது வயதை, 'ஒரு எல்லைக் கல்' என்று வைத்து, நீ உன்வாழ்க்கையை நடத்தவேண்டும். 'நாற்பதுக்கு மேல் நாய் பட்ட பாடு' என்பார்கள். நாற்பது வரையிலே ஒலி எழுப்பும் வினைகள்' நாற்பதுக்கு மேலேதான் எதிரொலியைக் கேட்கத் தொடங்குகின்றன. செய்த நன்மை தீமைகளின் எதிரொலியும் இப்போதுதான் கேட்கத் தொடங்கும். இதுவரை அவற்றை அலட்சியப் படுத்தக் கூடிய ரத்தம் இருந்தது; இப்போது ரத்தத்தைவிட, எதிரொலி சக்தி வாய்ந்ததாகக் காட்சியளிக்கும். துன்பத்தின் பரிபூரண சக்தியும் இப்போது தலையைச் சுற்றி வட்டமிடத் தொடங்கும். மனைவி, மக்கள், பொறுப்பு, பொருளாதார நிலை அனைத்தையும் பற்றிய கவலை, இந்தப் பருவத்தில்தான் ஆரம்பமாகும். இதுவரை வாழ்க்கையை ஒழுங்காக வாழாதவனைச் சுற்றி, அவை பேய் போல் நின்று கூத்தடிக்கும். ''ஐயோ! தாங்க முடியவில்லையே!'' என்ற ஓலம் இப்போது தான் ஆரம்பமாகும். ''இதுவரை எப்படியோ வாழ்ந்து விட்டேன். தெரியாமல் வாழ்ந்து விட்டேன். மன்னித்துக்கொள். எனது துன்பங்களுக்குப் பரிகாரம் கூறு'' என்கிறாயா? நல்லது. பாவங்களுக்கு மன்னிப்புத் தருகிற பாதிரியார் நானல்ல என்றாலும், ஓரளவுக்குப்;பரிகாரம் சொல்லக்கூடிய பக்குவம் எனக்கு உண்டு,

நாற்பது வயது, ஞானம் பிறக்கும் வயது. மீண்டும் நானே உதாரணமாகிறேன். ''என்ன நீ, பெரிய மேதையா? உன்னையே உதாரணமாக்கி கொண்டு போகிறாய்?'' என்று கேட்கிறீர்களா? நான் பனிரெண்டு வயதில் இருந்தே உலகத்தைப் பார்த்திருக்கிறேன். ஆகவே நான் அறிவில் மேதை இல்லைஎன்றாலும், அனுபவமேதை. இதுவரை நான் சொல்லி வந்த எல்லாவகைத் துன்பங்களையும் நான் அனுபவித்திருக்கிறேன். ரத்த வேகம் என்ன செய்யும் என்பதையும் நான் அறிவேன், அது வற்றும் போது என்ன நிலை என்பதும் எனக்குப் புரியும். கள்வனாக, காமுகனாக, நாத்திகனாக, வெறியனாக, கடன்காரனாக பலவகையான பின்னல்களை நானே பின்னி, நானே அவிழ்க்க முயன்றிருக்கிறேன். உறவு, பகை இரண்டாலும் வஞ்சிக்கப்பட்டிருக்கிறேன், உலகத்தைப் பக்கத்தில் இருந்தும் பார்த்திருக்கிறேன்; தூர நிருஷ்டியிலும் கண்டிருக்கிறேன். பலநாள் பட்டினியும் கிடந்திருக்கிறேன். வசதி வந்த போது கருங் குரங்கில் இருந்து பச்சைப் பாம்பு வரை சாப்பிட்டும் பார்த்திருக்கிறேன். நான், 'மாஸ்டர் ஆப் ஆல் சப்ஜக்ட்ஸ்' இல்லையென்றாலும், எத்தனை வியாதிகள் உண்டு. எத்தனை மருந்துகள் உண்டு என்பது எனக்குத் தெரியும்.

நன்றி: அர்த்தமுள்ள இந்து மதம்.


---

உன்னிடம் இரவல் வாங்கிப் படித்த செய்திப் பத்திரிக்கையை அவன் எந்தச் சீரோடு திரும்பத் தருகின்றானோ அதைக்கொண்டும் அவனை எடை போட்டுவிடலாம்.

விளையாட்டு:

# நவ நாயகன்

## திலிப் வெங்சாக்கர்.



துடுப்பாட்டத்தில் 'டென்சன்' இல்லாது ஆடும் இவரது பாணியே வித்தியாசமானது

அடித்தால் 'சிக்ஸர்' இல்லையென்றால் 'அவுட்' என்று விளாசித்தள்ளும் துடுப்பாட்டக்காரர்களுக்கு மத்தியில் சற்று வித்தியாசமானவர் உலகின் தலைச் சிறந்த துடுப்பாட்டக்காரராக பல முறை தெரிவாகியுள்ள திலீப்பின் பாணியே தனி. பட்டாசு வெடிப்பது போல் அடிக்காமல் நிதானித்து ஆடுவதே இவர் கையாளும் முறை. இதுவரை 17 செஞ்சரியடித்திருப்பது குறிப்பிடத்தக்கது. எனினும் இவை ஒன்றில் 'மெட்ச்சை' காப்பாற்றுவதற்காக அல்லது வெற்றிப்பாதையில் இடுவதற்காக பெறப்பட்டவையாகும். 1986 ல் 'விஸ்டன்' வீரருக்கான சர்வதேச விருது இவருக்கு கிடைத்தது. 1970 களின் பலம் பொருந்திய அணியாகக் கருதப்பட்ட கலிச்சரன் தலைமையிலான மேற்கிந்திய அணிக்கு எதிராக கல்கத்தாவில் ஆட்டமிழக்காது இவரடித்தச் சதமானது, இவர் இந்திய தேசிய அணியில் நிரந்தர இடம்பிடிக்க உதவியது எனினும், வெங்சாக்காருக்கு எதிரான ஒரு கோஷ்டி அணியிலும், கட்டுப்பாட்டுசபையிலும் காட்டியத் தீவிரமானது இவரின் முன்னேற்றத்தை வெகுவாகப் பாதித்தது.

1986ல் இந்திய அணியின் இங்கிலாந்துச் சுற்றுலாவின்போது இவை அனைத்தையும் மீறி பிரகாசிக்கத் தொடங்கினார், 'லோர்ட்ஸி'ல் சதமடித்து இந்திய அணியின் வெற்றியை உறுதிப்படுத்தினார், லீர்ட்ஸிலும் சதமடித்து வெற்றிக்கு வித்திட்டார். இதற்குப் பின்னர் இந்தியாவிற்கு சுற்றுலா மேற்கொண்ட எல்லா அணிகளுக்கெதிராகவும் சதமடித்ததன் மூலம் இந்திய தேசிய அளவிலும் சர்வ தேச மட்டத்திலும் முதலாவது பெட்ஸ்மேனாகத்' திகழ்கிறார்.

ஒரு நாள் ஆட்டமென்பது இன்று உலகெங்கும் ரசிக்கப்படும் நிலை உருவாகிவிட்டது. இத்தகைய ஆட்டத்தில் 2000 'ரன்' பெற்ற முதல் இந்தியர் இவரே. 1987ல் 'ரிலையன்ஸ்' உலகக் கிண்ணத்துக்கான அரையிறுதி ஆட்டத்தில் ஆங்கில அணியிடம் இந்தியா தோல்வி கண்டது. கபில் தேவ் இதற்காகப் பலவாறாக விமர்சிக்கப்பட்டாலும் வெங்சாக்கார் ஆடாததே இத்தோல்விக்கானப் பிரதானக் காரணமாக இந்தியக் கிரிக்கெட் அபிமானிகளால் கூறப்படுகிறது. சுகவீனம் காரணமாக இப்போட்டியில் திலீப் ஆடவில்லை.

தனது தலைமையின் கீழ் முதலாவதுப் போட்டியிலேயே சதமடித்தப் போதிலும் தோல்வியை தவிர்த்துக்கொள்ளமுடியாமற் போனது துரதிஸ்டமே, எனினும் நியூசிலாந்து அணிக்கெதிரான தொடர் வெற்றி தெம்பைத் தந்தாலும் மேற்கிந்திய சுற்றுலா மிகுந்த ஏமாற்றத்தை கொடுத்துள்ளது என்பது மறுக்க முடியாதது, இத்தொடரில் இவர் பிரகாசிக்க வில்லையென்பது குறிப்பிடத்தக்கது. எனவே இவரின் தலைமைத்துவம் ஆட்டம் கண்டுள்ளதாக உணர முடிகிறது. ஒரு கெப்டனாக மட்டுமன்றி ஒரு சிறந்த துடுப்பீட்ட வீரராகவும் இவரின் தேவை இந்திய அணிக்கு அவசியமாகி உள்ளது யாவரும் அறிந்ததே.

**சாதனைகள்:**

ஒரு நாள் ஆட்டங்களில் 3000 'ரன்' பெற்ற 7வது 'பெட்ஸ்மென்' இரண்டாவது இந்தியர்: 17- 'டெஸ்ட் செஞ்சரிப்' பெற்றிருக்கும் இவர் 6000 ரன் பெற்ற 17வது 'பெட்ஸ்மென்' மூன்றாவது இந்தியர்.

துரை.

**அறிமுகம்:**

அறையிலுள்ளவர்கள் அம்பலத்திற்கு (அரங்கத்திற்கு) வரவேண்டும் இதுவே ரோஜாவின் தாரக மந்திரமாகும். இலைமறை காய்களாக நிறைந்திருக்கும் எமது விளையாட்டு வீரர்களும் எல்லா வகையிலும் சிறப்பு பெற வேண்டும். இந்த வகையில் நாம் மகிழ்வோடு ஊக்குவித்து அறிமுகப்படுத்தும் வெவ்வேறான முதல் குழுக்கள் இதோ;

1) 'இன்னிஸ் கரப் பந்தாட்ட டீம்', ரொசிட்டா தோட்டம். கொட்டகலை
2) 'மெரினா கிரிகட் குழு', 144, செட்டியார் தெரு. கொழும்பு 11.
3) 'ஹாட்லி' கால் பந்தாட்டக் குழு, ஹட்டன் பஸார், கொட்டகலை.

திறமைமிகு விளையாட்டுக் குழுக்களின் அழைப்புக்காக இவை மகிழ்வோடு காத்திருக்கின்றன, எனவே சம்பந்தப்பட்ட குழுத்தலைவனோடு அன்றில் ரோஜாவோடு தொடர்பு கொள்ளவும். அறிமுகமாக விரும்பும் குழுக்களும் எம்மோடு தொடர்பு கொள்ளலாம். (முடிந்தால் குழுவின் (குருப்) படத்தை அனுப்பவும்)

● இளநரை
தோலுக்கு அடியில் உற்பத்தியாகும்'மெலனின்' என்ற நிறமியே முடிக்கு நிறத்தைக் கொடுக்கிறது. சில சமயங்களில் பல்வேறு காரணங்களால் மெலனினை உற்பத்தி செய்யும் செல்கள் வேலையை நிறுத்திவிடுவதால் முடி நரைக்க ஆரம்பிக்கின்றது. சில குடும்பங்களில் இள நரை தொடர்ந்து வருவதுண்டு. மற்றும் ஜுரத்தினாலும் கவலை, நிம்மதியின்மை, மனஇறுக்கம் திடீர் அதிர்ச்சி போன்றவைகளாலுங் கூட முடி நரைத்துப்போவதுண்டு.
புரதம் செறிந்த டானிக்குகளை எடுப்பது நல்லது. மேலும் விட்டமின்கள் குறிப்பாக 'பி காம்பிளக்ஸ் மற்றும் 'கல்சியம் பென்டோதனேட்' எடுக்கலாம்.
முடியைக் கறுப்பாக்க 'ஹேர் டை'களை பயன்படுத்தலாம்.
கண்களில் படாதவாறு பார்த்துக் கொள்ளுங்கள். இத்தகைய 'டை, களில் சில இரசாயனப் பொருட்கள் கலந்திருப்பதால் நீண்டகாலம் பயன்படுத்தும்போது கண்களில் எரிச்சல் ஏற்பட்டு பாதிக்கப் படலாம்.

விண்ணுலகிலிருந்து மண்ணுலகை நோக்கும் முதல் இருமனிதர்களும்;

ஆதாம்: அப்பவே நான் சொன்னேன் நமக்கின்னு ஒரு பரம்பரை வேணும்... இருக்கிறவரைக்கும் நாம தனியா ஜாலியா இருந்துட்டுப் போவோம்னு நீ கேட்டியா... இப்ப பாரு அதுக பண்ணுற அநியாயத்தை.

ஏவாள்: நான் நினைக்கலீங்க இதுக இவ்வளவு மோசமா நடந்துக்கும்னு. கடைக்குட்டி மூத்தவனுட்டு விளையாட்டு பொம்மையை பிடுங்கிட்டு போகையிலேயே தலையில ரெண்டு தட்டு போட்டிருக்கனும் இப்ப எல்லாமே டு லேட்டுங்க

● 'மகனே, உனது பகுத்தறிவை பலவீனப்படுத்தி, உனது மனசாட்சி செயல்படுவதைச் சேதப்படுத்துவது எதுவோ; கடவுளைப் பற்றிய உனது உள்ளுணர்வை மறைத்து, அல்லது ஆன்ம நல விஷயங்களிலுள்ள ஈடுபாட்டை எடுத்துவிடுவது எதுவோ: உன் மனதின்மீது உன் உடலின் ஆதிக்கத்தை அதிகரிக்கச்செய்வது எதுவோ, அதுவே பாவம் என்பதை நீ அறிவாயாக!'
பத்தொன்பதாம் நூற்றுண்டின் சிறந்த மேனாட்டு இறையடியாரான ஜான் வெஸ்லிக்கு அவரது தாயார்எழுதியக் கடிதம்.

● புண்ணை வேகமாகக் குணப்படுத்தும் சக்தி கண்ணீர்ச் சுரப்பிகளிலிருந்து வெளிவரும் நளாமில் சுரப்புகளுக்கு இருக்கிறது என்பதைச் சோவியத் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

● கடினமான உழைப்பிற்கு பின்னர் வயிறு முட்ட, மூக்குப் பிடிக்க உண்பது மகா தவறு. ஏனெனில் உடல் களைத்திருக்கும்போது ஜீரண உறுப்புக்கள் தங்களது வேலையைக் கிரமமாகச் செய்வதற்குத் தயாராய் இருப்பதில்லை அத்தோடு உணவு உண்ணபடும்போது பானங்கள் எடுக்கப்படக் கூடாது. ஏனெனில் நன்றாக மென்று உண்பதற்குப் போதிய திரவத்தை உமிழ் நீர் சுரப்பிகள் சுரப்பதால் வேறு எந்தவிதமான பானவகைகளும் தேவையற்றதாகும்.

அவன்: தங்கச்சி தனியா போய்க்கிட்டிருக்கேங்களே?

அவள்: இல்லையே செருப்போடத்தான் போய்கிட்டிருக்கேன் கவனிக்கல?



# அரக்கன்.

சுபபுத்திரன்

மஞ்சமலை என்னும் ஊரில் ஒரு பெரிய அரக்கன் வாழ்ந்து வந்தான். அவன் ஒவ்வொரு நாளும் சிறுபிள்ளைகளை அச்சுறுத்தியும். பெரியவர்களை தாக்கியும் வரலானன். அத்தோடு அவ்வூர் மக்களின் சகல விவசாயப் பயிர்களையும், விலங்குகளையும் தின்று வந்தான். ஒவ்வொரு நாளும் இப்படிச் செய்து வந்ததால் உற்பத்தி யாவும் அழிந்துப் போய்விட்டன. இனி அவனுக்கு உண்பதற்கு ஒன்றுமே கிடைக்கவில்லை. அத்தோடு அவனுக்கு மிகவும் பசியும் உண்டாயிற்று அதனால் ஆத்திரத்துடன் அவ்வூரிலிருந்து வேறு ஒரு ஊருக்குப் போக நினைத்தவனுய் தன் வாய்வந்தப்படி புலம்பிக்கொண்டு, காடுகளையும் மலைகளையும் கடல்களையும் கடந்து போய்க் கொண்டிருந்தான்.

அப்படி சென்றுக்கொண்டிருந்த வேளையில் கொளுத்தும் வெய்யிலாதலால் அதனை அவனுல் தாங்கவே முடியவில்லை. அதனுல் அவனுக்கு களைப்பும் தாகமும் ஏற்பட்டது. இதன் காரணமாக அவன் செல்லும் வழியில் குறுக்கே அகப்பட்ட கடலில் போய் நீரைக் குடிக்கலானுன். குடிக்கக்குடிக்க தாகமும் திரவில்லை அவன் அரக்கனல்லவா! அதனுல் அவன் கடலிலுள்ள நீர் எல்லாவற்றையும் குடித்து முடித்துவிட்டான். குடித்து முடிந்ததும் மீண்டும் நடக்கத் தொடங்கினுன், அவன் உப்பு நீரைக் குடித்ததால் மீண்டும் தாகம் ஏற்பட்டது. ஆனுல் குடிக்கவோ எங்கும் நீர் கிடைக்கவேயில்லை இருந்தும், சிரமப்பட்டு களைப்போடு வேறு ஒரு கிராமத்தை சென்றடைந்தான். அவன் சென்ற கிராமத்தில் பயிர்கள் நன்முக செழித்து வளர்ந்திருந்தன. வீடுகளில் ஆடு, மாடு, கோழி போன்றவைகளும் உற்பத்தியாகி நிறைந்திருந்தன, அந்த அரக்கன் அவற்றைக் கண்டு மிகவும் சந்தோசமடைந்தான், இன்று நமக்கு பெரும் வேட்டைதான் என்று மனதிற்குள் எண்ணியவனுய், தனது பெரும் பசியைப் போக்கிக் கொள்ள அன்றிரவே அங்கிருந்த அத்தனை ஆடு மாடு கோழிகளையும் ஏனைய விவசாயப் பொருட்களையும் தின்று முடித்து விட்டான் உண்டதின் பின் அவனுக்கு தண்ணீர்-தாகமும் ஏற்பட்டது. அதனுல் அங்குள்ள கிணறுகள் அனைத்திலும் இருந்த தண்ணீர் எல்லாவற்றையும் குடித்து முடித்துவிட்டு உண்டக் களைப்பால் அங்கிருந்த

ஒரு பெரிய மரத்தின் அடியில் போய்படுத்து உறங்கியும்விட்டான்.

அடுத்த நாள் காலே மக்கள் நித்திரைவிட்டு எழும்பிப் பார்த்தப்போது தமது வீட்டுப் பிராணிகளேயும் பயிர்களேயும் காணுது திகைத்து நின்றனர், போதாதற்கு தண்ணீர் எடுக்க கிணற்றடிக்குச் சென்றப்போது அங்கு நீரையும் காணுததால் அவர்களுக்குப் பெரும் அதிர்ச்சியும் ஆச்சரியமும் உண்டாயிற்று.

இப்படியே பல நாட்கள் தொடர, அக்கிராமத்து மக்களும் அவர்களுடைய குழந்தைகளும் பசியினுலும் பிணியினுலும் வாடலானுர்கள், பல குழந்தைகள் பட்டினியால் இறந்தும் போய் விட்டன. அதனுல் எல்லோருக்கும் என்ன செய்வதென்றே புரிய வில்லே. இதனுல் அங்கு வாழ்ந்தப் பொது மக்கள் அனேவரும் ஒன்று கூடி அந்த நாட்டு மன்னனிடம் சென்று முறையிட்டார்கள். அவரும் அதிர்ச்சியடைந்துப் போய் தன் நாட்டிலுள்ள சிறந்த வீரர்களில் இருபதுபேரைத் தேர்ந்தெடுத்து நடப்பு என்ன வென்று அறிந்து வரும்படி கட்டளே யிட்டார்.

நடந்ததை அறியும் நோக்குடன் அவர்களும் துயரத்துடன் சென்று அவ்வூரின் ஒவ்வொரு இடங்களேயும் காடு மேடுகளேயும் அலசிப் பார்த்தனர். எவ்வளவோ அலேந்துத் தேடியும் அவர்களால் என்ன நடந்த தென்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லே. யாரும் வேறு நாட்டு மன்னனின் சதித்திட்டத்தால் அவ்வூருக்கு இப் படியொரு நிலேயா? என்று அவர்கள் சந்தேகம் கொண்வர்களாய் அங்கிருந்த ஓர் பெரிய மாத்தின் கீழ் சற்று களேப்பாறும் நோக்குடன் அமர்வதற்கு வந்தார்கள். அங்கேதான் அந்தக் கொடுமை நிறைந்த அரக்கன் உண்டக் களேப்பால் இன்னும் உறங்கித்கொண்டிருந்தான்.

அவனேக் கண்ட அந்த வீரர்கள் உண்மையில் அச்சத் தால் நடுங்கியே போய் விட்டார்கள், அத்தனே விசாலமானது அவ னது உடம்பு, நித்திரையிலே அவன் மூச்சு விடும்போது அங்கிருந்த அந்த மரங்களின் கிளேகளும் பக்கத்லிருந்த வீட்டுக் கதவுகளும் கூரைகளும் ஆடலாயின. பூமியோ அதிர்ந்துக்கொண்டிருந்தது. அதைவிட அவ்வீரர்களுக்கு நெஞ்சு படக், படக்கென்று அடித்துக் கொண்டிருத்தது.

இருந்தும், ஒருவித மனதைரியத்துடன் அவ்வீரர்கள் அந்தக் கொடூர அரக்கனே நெருங்கி அவனே மெதுவாகத் தட்டிப் பார்த்தார் கள், அவன் சற்றும் அசைவதாக இல்லே. மீண்டும் துயிலெழுப் பிப் பார்த்தார்கள். அவனே கொஞ்சங்கூட விழிக்கவில்லே, அவ் வளவு பெரும் தூக்கம். மீண்டும் கையை அசைத்தார்கள், காலே அழுத்திப் பார்த்தார்கள், காதை திருகிப் பார்த்தார்கள், முகத்தைக் கிள்ளிப் பார்த்தார்கள் அவனே அவர்களே சட்டைசெய்வதாக இல்லே, அத்தனே உக்கிரமான தூக்கம். இதனுல் கோபங்கொண்ட அவ்வீ ரர்கள் தம் கையிலிருந்த தடிகளாலும் கோடரிகளாலும் ஈட்டிகளா லும் இரும்பாலும் அவனேத் தாக்கிப் பார்த்தார்கள், அவனே, அத்த னேக்கும் சுகமாக உறங்கிக் கொண்டிருந்தான்.

இதனுல் அவ்வீரர்களுக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லே, அவர்களுக்குள்ளே ஒரு மனப் பயமும் பீதியும் உண்டாயிற்று, அத்தோடு அவர்கள் ஒரு முடிவுக்கும் வரலானுர்கள், இவன்தான் அக்கிராமத்து பயிர்களேயும் விலங்குகளேயும் தின்றிருக்க வேண்டும். இவன் நித்திரைவிட்டு எழும்பி வந்தானுயின் இந்த நாட்டையே அழித்துவிடுவான், என்று எண்ணியவர்ளாய் தம் நாட்டு மன்னனிடம் போய் விடயத்தைக் கூறினுர்கள்.


இதைக் கேள்வியுற்ற மன்னனும்தன் சேனேப் படைகளுடன் அந்த விசித்திர அரக்கனேப் பார்க்க புறப்பட்டு வந்தான். அந்தப் பெரும் உருவமுடைய அரக்கனேக் கண்ட மாத்திரத்திலேயே மன்ன னுக்கும் ஒரு பேரதிர்ச்சி. தன் வாழ்நாளிலே இப்படியொரு உரு வத்தைக் கண்டதுமில்லே, அதனுல் அவனுக்கே என்ன செய்வதென் றே தெரியவில்லே.

மன்னனே அந்த அரக்கனே எழும்புவதற்கு தன்னுலான அனே த்து முயற்சிகளேயும் செய்துப் பார்த்தான் அவனே எழும்பவேயில்லே. அதனுல் கோபமுற்ற அரசன் தனது வலிமைமிக்க குதிரைப் படைகளேயும், யானேப்படைகளேயும் அந்த அரக்கனது உடம்பின் மீது ஓட விட்டுப் பார்த்தான், அப்படியும் அவன் துயிலெழும்புவதாக இல்லே. அத்தனேக்கும் அவனிடமிருந்து பெரும் குறட்டை மட்டுமே வெளிவந்துக் கொண்டிருந்தது. இதனுல் மன்னன், மகாராணி உட்பட

ஊர் மக்கள் அனைவரையுமே அவர்களையறியாமல் ஒரு விதமான பீதி ஆட்கொள்ளலாயிற்று, இவன் துயலெழும்பி வந்தால் நாட்டையே அழித்துவிடுவானே என்று பயந்தார்கள்.

ஆதலால், துயர் கொண்ட மன்னன் அங்குள்ள மக்களை அழைத்துக் கொண்டு அங்கு ஊரிலிருந்த கோயிலுக்குப் போய் தெய்வத்திடம் முறையிடலானான்.

அனைவருமே கண்களை மூடி வழிந்தோடும் கண்ணீரோடு தெய்வத்தை பயபக்தியோடு வணங்கி நின்றப் போதுதான் அக்கோயிலின் மூலஸ்தானத்திலிருந்து ஒரு சிறு வண்டு மிக கம்பீரத்தோடு பறந்து வரலாயிற்று, அப்படி கோயிலிலிருந்து வெளிவந்த அந்த வண்டானது நேரே அந்த அரக்கன் தூங்கிக்கொண்டிருந்த இடத்யைடைந்தது. அங்கு சென்று உர், உர் என்ற பேரிரைச்சலோடும் சத்தத்துடனும்



அந்த அரக்கனின் உடலை இரண்டு முறை சுற்றி சுற்றி வந்தது பிறகு அவனது உடம்பின் மீது அங்குமிங்கும் சற்று அமர்ந்தது அதன் பின் அவனது வலது காதின் ஓட்டைக்குள் நுழைந்தது அவ்வளவுதான்...,

அதுவரை நீண்டப் பெருங்குறட்டையோடு துயில் கொண்டிருந்த அவ்வரக்கன் தன்னையுமறியாது ஏதோ மின்னலால் தாக்குண்டவனைப்போல் ஆ,,,ஆ,,, என்ற சத்தத்துடன் துள்ளி எழலானான், எழுந்ததோடு மட்டுமல்லாது மலையொன்றை பெயர்த்துக் கொண்டு ஓடுவதைப்போல், காட்டையும் மேட்டையும் கடந்து ஓடலானான்.

அதன் பிறகுதான் அவ்வூர் மக்கள் நிம்மதியடைந்தார்கள். குழந்தைகளும் மகிழ்ச்சியடைந்தன, ஆடு, மாடு கோழி போன்றவைகளும் மீண்டும் பெருகளாயின, பயிர்களும் செழித்து வளரலாயின அரக்கனை விரட்டிய அவ்வண்டின் வடிவிலே சென்றது இறைவன்தான் என்பதை அறிந்த அவ்வூர் மக்கள் இரட்டிப்பு மகிழ்ச்சியும் அடைந்தார்கள்.

முற்றும்.

---

வேதனையால் வாடும் துடிப்புக்களே!

உங்கள் குடும்பத்தில் அகால மரணமுற்ற, இயற்கை மரணமெய்திய உயிர்களை எண்ணி இன்னும் கண் கலங்கிக் கொண்டிருக்கின்றீர்களா? அதில் எமக்கும் சரிபங்கு உண்டு என்பதை இத்தால் நாம் சோகத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம். அவர்களது நினைவஞ்சலியை இலவசமாகப் பிரசுரித்து தருவதில் நாமும் ஆறுதல் அடைவோமாக. எனவே ரோஜாவோடு தொடர்பு கொள்வீர்களாக! படம் அவசியமல்ல!

---

புதிதாக மலரும் ரோஜாவை நாமும் வாழ்த்துவோமாக!

தெய்வா ஜுவலர்ஸ்

138, (உள்ளே) செட்டியார் தெரு,
கொழும்பு 11,
தொலைபேசி 545336.


நயம். நாணயம். நம்பிக்கை.

இவற்றின் இருப்பிடம் தெய்வா ஜுவலர்ஸ்.

# எமது இணைந்த கருத்து



1



4

வேண்டும்: வேண்டும்; நமக்கொரு முழு நீள சஞ்சிகை வேண்டும்--அதுவும் புத்தக வடிவிலே வேண்டும்!


இல்லறை காயகளாக நின்றிருக்கும் திறமை எழுத்தாளர்கள் அறையினின்றும் அம்பலத்திற்கு (அரங்கத்திற்கு) வர வேண்டும்!

வறுமையிலே வாடுகின்ற ஏழை எழுத்தாளர்கள் - செழுமையாய் வாழ வழி வேண்டும்!

குப்பையிலே கிடக்கின்ற குன்றிமணிகள் குழிகளினின்றும் வெளிவர வேண்டும்!



2



5

செத்து, செத்துப் பிழைக்கின்ற குப்பி விளக்குகள் குத்து விளக்குகளாய் பிரகாசிக்க வேண்டும்!

சாதாரண மரங்களோடு கிடக்கின்ற சந்தன மரங்கள் குழைத்த சந்தன வில்லைகளாய் மணக்க வேண்டும்!

அறிவிலி என்ற அவப் பெயரால் சிந்தனை நிறைந்த சமூகத்தை நாற்றமெடுக்கும் சகதியால் மூடி வைக்க நினைக்கும் பெருஞ் சிலன்களுக்கு மத்தியில் வெட்டியெடுக்கப்பட்ட புது மண்ணின் வாசனையை எடுத்துச் செல்ல நல்லக் களஞ்சியங்கள் வேண்டும்!

எமக்குள்ளே உள்ள நிறைகளை எடுத்துச் சொல்லவும் குறைகளைக் களைந்து செல்லவும் ஆக்கம் நிறைந்த சாதனங்கள் வேண்டும்!

வந்தோம் - வாழ்ந்தோம் - செத்தோம் என்றில்லாமல் பசுமையை வளர்த்தோம், பசுமையாய் வாழ்ந்தோம், வரிசையாய் வந்தோம் முன் வரிசையில் நின்றோம் என்று நம்மையும் மற்றவர்கள் கூற வேண்டும்!



3



ஆதலால் வேண்டும், வேண்டும் எமக்குள்ளே தேசிய ரீதியில் ஒரஞ்சகமான வாராந்த, மாதாந்த சஞ்சிகைகள் இன்னும் உருவாக வேண்டும்-அவை நம்மை மனிதராய் உருவாக்க உதவ வேண்டும்!

அதற்கொரு முன்னோடியாக இந்த ரோஜா இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவரது மனங்களிலும் இருக்கின்ற ஏனைய வழிகாட்டி நூல்களோடு தானும் ஒரு தனி மலராக நின்று சுகந்தம் பரப்ப வேண்டுமென்று நாமும் மனதார வாழ்த்துவோமாக!

1) திரு,பெ .ரெங்கசாமி, பி, கம், ஆசிரியர் செண்,மேரிஸ் தமிழ் மகாவித்தியாலயம், பொகவந்தலாவ.

2),திரு, என், வெங்கடாசலம். ஒரு தொழிலாளத் தலைவர் ரொசிட்டா தோட்டம், கொட்டகலை.

3)திரு ஜி, எஸ், மனோஹரன். ஒரு சமூகத்தொண்டன், கொழும்பு 15.

4) திரு, மைக்கல் கொலின். பத்திரிகை ஆசிரியர்,- தாகம். திருகோணமலை.



7

5)ஆர், ஹரிதாஸன். ஒரு புத்தகப் பிரியர் செட்டியார் தெரு. கொழும்பு

6)எஸ். ஆறுமுகம். ஒரு தோட்டத் தொழிலாளி டோனிகிவ் குருப். கொட்டகலை.

7) வி. கந்தசாமி, ஒரு கவிஞர், ரட்ணம் ரோட், கொழும்பு13.

நமது பார்வை; - ஆய்வுக் குழு



# தாக்குப்பிடிப்பாரா கருணாநிதி?

அரசியல் வாழ்விலே நீண்ட பொறுமையைக் கடைப்பிடித்து, கட்சியைக் கட்டுப்பாட்டோடு வைத்திருந்த கலைஞர் தனக்கு கிடைத்திருக்கும் நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தன்னை நிலை நாட்டிக் கொள்வாரா? அன்றில்,,,,

தமிழர்கள் மட்மல்ல திராவிடர்கள் அனைவருமே எல்லாவற்றிலும் சிறப்பாக வாழ வேண்டும் என்ற நன்நோக்கோடு தமிழ் நாடு, ஆந்திரா, கன்னடம், கேரளா ஆகிய நான்கு திராவிட மாநிலங்களிலும் ஓர் எழுச்சியைக் காண துடிப்போடு செயல்பட்ட திராவிடத் தந்தை பெரியார் அவர்கள், தன் சமுதாய மேம்பாட்டுக் கொள்கைகளால் திராவிட பூமியனைத்திலும் வெற்றி பெற்றாரோ என்னவோ, தமிழகத்திலே அவரது புரட்சி விதைகள் எப்படியோ பரவலாய் தளிர்விடலாயின என்பதை யாராலும் மறுக்க முடியாது.

அப்படி துளிர்விட்ட செடிகளுக்கு பெரியாரது தலைமைச் சிஷ்யனான அண்ணா அவர்கள் அள்ளித் தெளித்த பசளையானது உண்மையில் அனைத்து ரகங்களும் நிறைந்த போஷாக்கு உரமாக மாறி அந்த இளஞ்செடிகளை கனி தரும் நல்ல மரங்களாக உருவாக்கியது என்றால், அதுவும மிகையாகாது.

'புதியதோர் உலகம் செய்வோம்'-- என்றுப் பாடிய பெருங் கவிஞனின் செய்யுளுக்கு வடிவங் கொடுத்த அண்ணா அவர்கள் உண்மையில் இந்திய துணைக் கண்டத்தில் தமிழ் மண்ணை ஒரு புது யுகமாகவே மாற்றினார். அதன் மூலம் பிராமணத்து சாயலிலே, ஆதிக்கத்திலே கல்யாணிராகம் மீட்டிக்கொண்டிருந்த அரசியல்வாதிகளுக்கு ஒரு பேரிடியேதான் என்றால், அதுவும் சாலவே பொருந்தும்.

இதனால் சுகமில்லாத நெடும் நித்திரையில் இடையிடையே வெறும் கொட்டாவியை மட்டும் விட்டுக் கொண்டிருந்த தமிழகம் ஓரளவு சுறுசுறுப்படைந்தது என்பதும் உண்மையே.

தன் கால அட்டவணைக்கேற்ப புவியன்னையை ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த ஆதவனுங்கூட, அப்போது உதய சூரியனாய் மாறி தமிழகத்தை முழுவதுமாக தன் பொற்கதிர்களால் தங்கமுலாம் பூசிக்கொண்டிருந்தான் என்றே கூறவேண்டும், அரசியலிலே, சமுதாய மாற்றத்திலே அந்த உள்ளூர்த் தமிழ் மக்கள் அப்போதுதான் உண்மையான சுகத்தை அடையத் தொடங்கினார்கள்.

ஆனால், ஆனால்.,.. வெண்ணெய் திரண்டு வந்தப்போது தாழி. உடைந்தக் கதையாய், ஒரே பலமான அந்தப் பெருந்தலைவன், பாரிய ஆறுவடைக்கு முன்னே நோய்வாய்ப்பட்டு இறந்தப் போதுதான் தமிழகத்தை மீண்டும் இருள் கவ்வத் தொடங்கியது.

எது எப்படியோ, திராவிடர்களின் வடுறுவலுக்கு முன் காங்கிரஸாரின், குறிப்பாக பிராமணர்களின் கைக்குள் அடங்கிக்கிடந்த தமிழகத்து நிர்வாக இயந்திரம் சிறப்பாக ஊழலற்று ஓடிக்கொண்டிருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது, இருந்தும் அண்ணாவுக்குப் பின் தமிழகத்தின் முதல்வர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட கருணாநிதி அவர்கள், ஆரம்பத்தில் தன் இயற்கை குணத்தோடு உருவான இளமைத் துடிப்பையுங் கொண்டுதான், பதவிக்கு வருமுன் எழுதிய கருத்தாழமிக்க நூல்களுக்கும், திரைப்பட வசனங்களுக்கும் உயிர் கொடுத்தவராய் தமிழகத்து அரசியலிலே அண்ணாவையும் மிஞ்சும் தம்பியாக நின்று செயல்பட்டு தமிழகத்தை இந்தியர் அனைவரும் பார்த்து ரசிக்கும் ஓர் உயர்வான மாநிலமாக மாற்றிக் கொண்டிருந்ததும், முன்னர் தமிழகத்தை கோலோச்சிய பிராமணத் தலைவர்களும் பெருதலைவர் காமராஜரும் கருணாநிதியின் அரசியலைக் கண்டு மூக்கில் விரலை வைத்தனரென்பதும் உண்மையே; இவரது அப்போதைய இத்திருப்பணிக்குப் பின்னே ஒரு சக்திமிக்க திரைப்பட நடிகரும் நின்றுக் கொண்டிருந்தார் என்பதையும் நாம் இவ்வேளையில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

(இக்கட்டுரைக்கு இது ஒரு முன்னுரை மட்டுமே இதனை முடித்து வைக்கும் பணியை.. ..., தமிழ் நாட்டின் இன்றைய அரசியல் நிலையை அலசி, ஆராய்ந்து எழுதும் சந்தர்ப்பத்தை நாம் உங்களிடம் ஒப்படைப்போமாக! அப்படி கிடைக்கின்ற சிறந்த முடிவுரையை அடுத்த இதழில் நாம் பிரசுரிப்போம் என்பதை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம், இல்லையேல் எமது கட்டுரை தொடரும். நன்றி வாசகர்களே!)

# மக்கள் பக்கம்

ஏக்கமோ ஏக்கம்! எம், ஜி, ஆர் படத்தையும் தொலைக் காட்சியில் பார்க்க வேண்டுமென்ற ஆசை! நிறைவேறுமா?

க. ராஜகுமார், கொழும்பு 11.

இக்கட்டான வேளைகளில் மட்டுமல்ல நல்ல பகல் பொழுதிலுங் கூட வகையாக மாட்டிக் கொண்டால் கையிலுள்ள காசு, பணம், நகைகள், ஏன் உயிருக்கே பெரும் ஆபத்து. இச்சூழ்நிலை இன்று கொழும்பில் எத்தெருவை எடுத்து கொண்டாலும் அன்றாடம் நடக்கும் சாதாரண சம்பவங்களாகிவிட்டன, இதற்கொரு முடிவே இராதா?

து.அசோகன், கொழும்பு 13.

கொழும்பு 'கோல்பேஸ்' சந்தியிலிருந்து ஏறக்குறைய முக்கால் கிலோ மீட்டர்' தூரமுள்ள 'இமிகிரேசன்' ஆபிஸை நோக்கி 'பாஸ்போர்ட்' எடுக்கவும். இலங்கை பிரஜாவுரிமை பெறும் நோக்குடனும் அன்றாடம் படையெடுக்கும் பல்லாயிரக் கணக்கான ஏழை ஜனங்களை கொளுத்தும் வெய்யிலில் வெறும் நடையோடு செல்வதைப் பார்க்கும் போது, ஏன் நாமே அதனை பெரும் நடையோடு யதார்த்தமாக அனுபவிக்கும் போதும் வேதனையாக உள்ளது, சொந்தக் கார்களோ அன்றில் ஆட்டோக்களை வாடகைக்கு அமர்த்தி செல்லும் வசதியோ இல்லாத இந்த ஏழை மக்களுக்காக போதிய பஸ் வசதியை செய்து தருவது (வேலை நிறுத்தம் முடிந்ததும்) அரசின் கடமையாகும்.

வீ, சந்திரன், கொழும்பு 11,

வாசகர்களே,

தமிழிலே ஒரு புது சஞ்சிகை வெளியிட முயற்சிப்போம் என்று கூறினால் கூட, ஆத்ம நண்பர்களே தூர ஓடும் காலமிது. இந்தளவில் இருக்கின்றது நமது பெருமைக்குரிய இலக்கிய உலகம். இந்நிலையிலே விஷப் பரீட்சையாக, ஆனால் உங்களையெல்லாம் ஊக்குவிக்க வேண்டுமென்ற நன்நோக்கோடு ஆரம்பித்த இந்த புது மலரில் சில குறைபாடுகள் குறிப்பாக, அச்சுக் கோத்தலில் சில குழப்பங்கள் ஏற்பட்டமைக்காக வருந்துகின்றோம், இது மீண்டும் தொடராது பார்த்துக்கொள்வது எமது கடமையாகும். எனவே, 'நோ பப்ளிக் காமன்ட்ஸ்.' கடித மூலமான கண்டனங்களை, பாராட்டுதல்களை மகிழ்வோடு ஏற்றுக்கொள்வோம். நன்றி.


காலத்திற்கேற்ற கருத்துக்களை அள்ளித் தரும்
நல்ல சஞ்சிகையாக அமையவிருக்கும்
நவரோஜாவை வாழ்த்துவதில்
நாமும் பெருமை
அடைவோமாக!

ரஞ்சனாஸ் ஜுவலரி
116, செட்டியார் தெரு கொழும்பு 11.

தொலைபேசி 26776.

நம்பிக்கைக்கு!

தரமான நகைகளுக்கு!

தலைநகரில் ஓரிடம்:

ரஞ்சனாஸ்

இலங்கையின் மலைநாட்டிலுள்ள தேயிலைப் பாக்டரிகளில் சற்று வித்தியாசமானது அக்கரபத்தனை ' பசுமலையிலுள்ள 'சிட்டி' தேயிலை பாக்டரி: ஏனைய தேயிலைப், பாக்டரிகளைப் போல் வெறும் தேயிலைத் தூள்களை மட்டும் இது தயாரிக்காமல் நல்ல அரும்பு தேயிலையைக் கொண்டு ஒரு வகை தேயிலை வில்லைகளை இது உருவாக்குகின்றது. அநேகமாக விலையால் உயர்ந்த இந்த வில்லைகள் உள்ளூரில் விற்கப்படுவதில்லை, வெளியூர்களுக்கே இது ஏற்றுமதி செய்யப்படுகின்றது. வெளிநாட்டுக் கம்பனியொன்றுடன் தொடர்புடைய இதன் தொழில் ரகசியங்கள் கூட பொதுவாக உள்ளூரில் வெளியிடப்படுவதில்லை'

உலக முடிவு.

தலையங்கத்தைப் பார்த்தவுடன் என்ன உலகம் அழியப் போகின்றதா என்று கேட்டு விடாதீர்கள், கண்ணுக்கு குளிர்ச்சியளிக்கும் மலையகத்தின் ஒரு பகுதியாம் டயகம தோட்டத்திற்குப் பக்கத்தில் ஓர் உயர்ந்த மலையிருக்கின்றது. அங்கே அமைதியானஓர் இடத்திற்கு இப்படி ஒரு பெயர் மலையுச்சியிலே ஒரு குகையைப் போல் காட்சியளிக்கும் பாதாளம் நிறைந்த அவ்விடத்திலிருந்து மலையகத்தின் ஏனைய இடங்களைப் பார்த்து விடலாம் ஒருபுறம் பலாங்கொடையும் மறுபுறம் ஒஹியவும் தெரியும். சாந்தி நிறைந்த அந்த இடத்திலிருந்து கூர்ந்து கீழே நோக்குவோமோமானால் இ.போ.ச. பஸ்கள் அனைத்தும் பொதுவாக நாம் சாப்பிடும் பான், அளவிலே மட்டும் ஊர்வதைப் பார்ப்பதற்கு மிக, மிக ஜோராக இருக்கும்.

பண்டாரவளைக்கும் பதுளைக்கும் இடையிலுள்ள தெமோதரை புகையிரத நிலையமோ இலங்கையிலுள்ள ஏனையவற்றைவிட சற்று வித்தியாசமானது. அதாளப் பாதாளத்தில் மிகச் சிரமத்தோடு பெரும் கற்களுக்குள் குடையப்பட்ட சுரங்கத்திற்கு மேலேயே இந்த நிலையம் வடிவாக அமைந்துள்ளது. அக்காலத்தில் வெள்ளையர்கள் இதனை நிர்மாணிக்க உதவியதே ஒரு தமிழ் தொழிலாளிதானும். ஆம்! அவன் ஒரு நாள் தன் வேலைத்தளத்தில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தப்போது, தற்செயலாய். ஆனால் லாவகமாய்க் கட்டிய சுற்று தலைப்பாகைதான் அந்த தெமோதரை இரயில்வே நிலையமாம். அதே தலைப்பாகை உருதானும் அந்த 'ஸ்டேசன்' நம்பலாமா?



அவர்: ஐயா உங்க மகனுக்கு வயசு என்ன ஆகுது?
இவர்: பொம்புளைப் பிள்ளையாகயிருந்தா நல்லெண்ணை குடிக்கிற வயசு.

உலகிலேயே அதிகளவில் தூக்குத் தண்டனையை நிறைவேற்றும் நாடு எதுவென்றால் கொலைவெறி நிறைந்த இனவாத நாடான தென்னாபிரிக்கா என்பதை யாரும் இலகுதென்னுபிரிக்கா என்பதை யாரும் இலகுவில் கூறிவிடுவார்கள், இனவாத வெள்ளையனின் அதிக்கத்தால் சுளுப்பினை சுதந்திரப் போராளிகள் படும் வேதனைகளோ சொல்லிலடங்கா (உதாரணத்திற்கு ஒரு நெல்சன் மண்டேலா) தூக்கு கயிற்றுல் தண்டனையை நிறைவேற்றும் 'அருக்கோக' களில் முக்கியஸ்தரான கிரிஸ் பெர்னுட் (வயது81) இதனை ஒரு 'பார்ட் டைம்' வேலையாகவே கொள்கின்றார். நூற்றுக்கணக்கானவர்களை தூக்கிலிட்ட இவர், தான் இறந்தபின் பிறகு தனக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்குமென்று நம்புகின்றார், பாவமான ஒரு தொழிலைச் செய்தாலும் அதையும் தான் கடமையுணர்ச்சியோடு செய்வதாக மார் தட்டிக் கொள்கின்றார் இந்தப் பெருங் கொலையாளி.

அவன்: அண்ணே வன்செயல் இனி எப்ப வரும்?
இவன்: ஏண்டா அவ்வளவு அக்கறையா கேக்கிற?
அவன்: வேறொன்னுமில்ல அண்ணே போனமுற வன்செயல்ல தூக்கிட்டுப் போன கடிகாரம் நேத்தோட நின்னு போச்சி அதான்.....

அவர்! என்னங்க அந்தப் பையனுட்ட கைவிரல்கள் ஒன்னையுமே காணேம்?
இவர்: ஓ! அதுவா! மச்சவேணும்' மச்ச வேணும் சாப்பிட ஆசையாயிருக்குனு அவுங்கப்பாவ கெஞ்சிப்பார்த்தான், அவுரு அசையல்ல அதனால இவன் தன்னுட்டு கை விரல்களையே குசியா கடிச்சி சாப்பிட்டுட்டான்,

ராமு: ஏண்டா சோமு கல்யாணம் முடிஞ்சி ரெண்டு நாள்கூட ஆகல முகத்தில கொஞ்சங்கூட சந்தோசத்தையே காணேம்.
சோமு: சந்தோஷம் எங்க இருக்குடா வரும் அதத்தான் அவுங்க அப்பா கூட்டிகிட்டுப் போயிட்டாரே.
ரா: என்னடா சொல்லுற
சோமு: அதான் ஆடி பொறந்திருச்சில்ல ஒரு நிமிஷம் ஒன்ன இருக்கவுட மாட்டாருங்க பாவிப் பயலுவ.



ஒருவர்: என்னங்க உங்க வயிறு வர வர பெருசாகிட்டே போகுது?
மற்றவர்: ஓ! அதுவா! வேறொன்னுமில்லங்க என் மனைவி எட்டு மாசமா இருக்கா அவ வயித்த தள்ளிகிட்டிருக்கிறத பார்க்க எனக்கு சகிக்கல அதான் நானும்... இன்பமோ துன்பமோ எல்லாத்திலேயும் சரிபாதி இதான் நம்ம கொள்கை!



ஒரு அரசியல்வாதிக்கு பெயர் போன ஐந்து நட்சத்திர ஓட்டல் ஒன்றில் விமர்சையாக பொன்னுடை போர்ப்பு விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது

ஒருவர்: ஏங்க நம்ம தலைவர் உபதலைவர் கிட்ட பயங்கரமா சீறி விழுந்துகிட்டே இருக்காரு?
மற்றவர்: வேறென்னங்க? எத்தனை நாளைக்குத்தான் பொன்னுடை...பொன்னுடைனு இந்த வெறும் பட்டுத்துணியவே போத்திக்கிறது இங்கிலிஸ் பெட்டனுல ஒரு தங்கச் சங்கிலி, ஒரு மோதிரம் அப்பிடி இப்பிடின்னு அரேன்ச் பண்ணக் கூடாதா அப்பிடின்னுதான்

ஆசிரியர் பிள்ளைகளைப் பார்த்து
'பிள்ளைகளே இதை வாசிங்யுங்கள் பார்ப்போம்; குமார் இஸ் ஏ ஜெண்டில் மன்'.
ஒரு பையன்: இருக்கையை விட்டு எழுந்து ஜெண்டில்மென்னு என்ன சார் அர்த்தம்?
ஆசிரியர்:ஏதோ கோபத்துடன்]
லாங்கிளைகடனைக் கொடுக்கக்கூடாது, ஊர் சொத்தைக் கொள்ளையடிக்கனும் பொம்பளை பொ.ஜுக்கியா இருக்கனும்...
பையன்: அப்பிடின்னு எங்கப்பா ஜெண்டில் மென்தான் சார் வரப்போற நேர்தல்ல கூட போட்டியிடுறதா ஐடியா வச்சிருக்காரு

ஒருவர்: நாம ஆரம்பிக்கப்போற சங்கத்துக்கு உளைப்பாளர் தேசிய மையம்னு வச்சா என்னங்க!
மற்றவர்: அப்புறம் என்னங்க அது மையத்தான்.

சில வாழ்க்கைக்கு அவர் கூறும் சில நன்னெறிகள்:

# ஒரு சீதா பாட்டி



நீ சம்சாரியாய் வாழ விரும்புகின்றாயா? உந்தன் முதன் முதலீடு ஒரு பசுமாட்டில் இருக்கட்டும்.

ஓர் ஆடாதோடை, ஒரு நொச்சி, ஒரு குப்பைமேனி, ஒரு துளசி, ஒரு எலுமிச்சை, ஒரு வேம்பு: இத்தனை மரங்களும் உன் வீட்டுத்தோட்டத்தில் இருக்குமானால் நீ ஆறு டாக்டர்களோடு வாழ்ந்துக் கொண்டிருக்கின்றாய் என்றே அர்த்தமாகும்.

எழுதப்படாத கணக்கும் உழுது விளைவிக்கப்படாத பயிரும் ஒருபோதும் உருப்படாது.

கண்ணியமான மனிதன் எப்போதும் நீதியாகவே சிந்திப்பான்.

பொறுமையுடையோரை பொறுமையற்றோரால் ஒருபோதும் வெல்ல முடியாது.

சேவை செய்ய முற்பட்டால் உன் மனத்திலுருந்து வேற்றுமை மனப்பான்மை விலகிவிடும்.

ஆயிரங் கண்ணுடையாள் உன்னை சோதிக்க வேண்டுமென்று ஆசைக் கொண்டுவிட்டாளாயின் தனக்கே உரித்தான பல வழிகளைக் கையாண்டு விடுவாள்' அதில் ஒன்றுதான் உடம்புக்குள்ளே புகுந்து, உந்தன் உடம்பைக் குடைந்து அவள் தன் கண்களைத் திறந்து காட்டுவதாகும். அதற்காக நீ எவ்வகையிலும் கவலை கொள்ளத் தேவையேயில்லை, பரீட்சைக்குப் பின் தானே சித்தியே. அவ்வேளையில் உன்னிடத்தே இருக்க வேண்டியதெல்லாம் உடல் சுத்தமும் உள்ளத்து சுத்தமுமே,

தொகுப்பு விஜி

---

உள்நாட்டு. வெளிநாட்டு வாசகர்களே!

உங்களிடமிருந்து நாம் தரமான கதைகளை, கட்டுரைகளை கேள்விகளை, துணுக்குகளை, விகடத் துணுக்குகளை பொன்மொழிகளை, அழகோவியங்களை, இத்தியாதி, இத்தியாதி..... எதிர்பார்க்கின்றோம், தருவீர்களா? இந்த ரோஜாவை சுகந்தம் பரப்பச் செய்வீர்களா?

நன்றி.

---

மருத்துவம்:

# அல்சரா உங்களுக்கேப் படி வந்தது?

''நாசமாப் போறவனே, வந்து சோத்தைக் கொட்டிக்கோ! எனக்கு ஏகப்பட்ட வேலை கிடக்கு: கோபம், 'டக், டக் 'ஐயையோ, இன்னிக்கும் பஸ்ஸைக் காணலியே. லேட்டா போனாக் கடுவன் பூனை மானேஜர். கையெழுத்துப் போடவிடாதே.' பரபரப்பு. ட்ரிப். ட்ரிப். என்ன, இந்த்த தடவையும் பேப்பர்லே நம்பரைக் காணோமா? நம்ம வம்சமே அதிர்ஷ்டக் கட்டைடாப்பா ஏமாற்றம், சொட் சொட்,

இன்னும் இதுபோன்று படபடப்பு சலிப்பு, வெறுப்பு, சின்னப் பொருமைகள்- இந்த நவரச நாயகி யார் என்று சுற்று முற்றும் பார்க்கிறீர்களா? பின்னே வேறு யாரும்மா? சாக்ஷாத் திருமதி இல்லத்தரசிதான். சரி விடுங்க, அதுக்கென்ன வாழ்க்கைன்னு நாலுந்தான் இருக்கும்: என்று சப்பைக் கட்டுக் கட்டுகிறவர்களுக்குத்தான் பின்னால் வரும் டக். டக், ட்ரிப்.ட்ரிப் இத்யாதி. ஒவ்வொரு முறை உணர்ச்சி வசப்படும் போதும். பதற்றம் அடையும் போதும் நம் உடலில் ஜீரணத்துக்கு உதவும் நீர்களைச் சுரக்கும் சுரப்பிகள் தாறுமாறாக வேலைசெய்ய ஆரம்பிக்கின்றன விளைவு வேறென்ன? வியாதிகள்தான். அந்தகாலச் சிவப்பிந்தியர்கள் நீதிமன்றத்தில் சாட்சி சொல்பவனை வெறும் அரிசியை மெல்லச் சொல்வார்களாம். அவன் பொய் கூறினால் அவனுக்கிருக்கும் பதற்றம் காரணமாக உமிழ்நீர் சரியாகச் சுரக்காமல் அவன் வாய் உலர்ந்து அரிசியை மெல்ல முடியாதாம். பழங்காலச் சீனாவில் பிடிபட்ட ஒற்றர்களுக்கு, கார்போஹைடிரேட் குறைந்த, புரோட்டீன் மிகுந்த உணவைக்கொடுப்பார்களாம். இது அவர்கள் உடல் எடையைக் குறைத்து, நரம்பு மண்டலத்தைப் பலமிழக்கச் செய்து, மனோ திடத்தைக் குறைத்து இறுதியில் எல்லா ரகசியங்களையும் கக்கி விடும்படி செய்யுமாம். இப்போது விஞ்ஞான ஆராய்ச்சிகளின் மூலமும் பதற்றம் போன்ற உணர்வுகள் ஜீரண உறுப்புக்களைப் பாதிக்குமென்று கண்டுபிடித்துள்ளனர், அதிகமான காரம், கிராம்பு, பட்டை போன்ற வாசனைப் பொருட்கள் ஆல்கஹால், கலந்த போதை தரும் மதுபான வகைகள், சிகரட்டிலிருக்கும் 'நிகோடின்' காப்பியிலிருக்கும் 'காஃப்பின்' எனப்படும் போதைப் பொருள் இவை மட்டுமல்லாமல் கோபம், சலிப்பு போன்ற அதீத உணர்வுகளும், வயிற்றில் சுரக்கும் ஜீரண நீரான 'ஹைடராக்ளிக்' திரவத்தை அதிகமாகச் சுரக்க வைத்துவிடுகின்றன. ஆக! குடற் புண்ணுக்கு அத்திவாரமே இதுதான்,

ஒரு தமிழகத்து பத்திரிகையைத் தழுவியது

# சிவாஜி!



**இந்த புத்தம் புது ரோஜாவால் அலங்கரிக்கப்படும் முதல் சினிமா நடிகர்.**
**---நடிகர் திலகம் சிவாஜி!---**

'Artists are born not created'—சிவாஜியும் பிறவி நடிகரேதான், இதில் கடுகளவும் சந்தேகமேயில்லை. ஆம்! இளமையிலேயே முதுமை நடிகராகிவிட்ட பெரும் நடிகர் என்றால் மிகையாகாது.

பள்ளி சென்று பாடம் படிக்க வேண்டிய பருவதிலேயே வறுமை காரணமாக நடிப்பு எனும் கலாசாலையிலே மாணவனாகப் புகுத்தப்பட்டு இன்று அத்துறையிலே பெரியதோர் சர்வகலாசாலையாகி, உலகத்திலே பளிச்சிட்டு மின்னும் சிறந்த நடிகர் வரிசையில் தானும் ஒருவராய்-அதிலும் நாற்பது வருடங்களாய் முதல்தர நடிகனாக, கதாநாயகனாக சற்றும் களைத்திடாமல், சலிக்காமல் நடித்துக் கொண்டிருக்கும் சிவாஜியை எண்ணும்போது உண்மையில் தமிழர்களாகிய நாம் அனைவரும் பெருமை கொள்ளாமல் இருக்க முடியாது. Addition to this, we appreciate your punctuality Mr. Sivaji.

அவரது முதல் கதாநாயக சினிமாவான பராசக்தி தமிழ் சினிமாவைப் பொருத்தவரை எல்லாவகையிலும் ஒரு திருப்புமுனையே. சினிமாவுக்கு வருமுன்னே சிவாஜிக்கு உறுதுணையாக இருந்தது நாடகத் துறையாகும். இந்த நாடகத் துறையானது இன்னுங்கூட காலங் கடந்தும் எததனையோ நலிந்த நடிகர்களுக்கு சோறு போட்டு வாழ வைக்கின்றதென்றால் அதன் அக்கால வலிமையைத்தான் என்னென்பது. சாதாரண நடிகனாய் இருந்த கணேசனை புகழ்பெற்ற மராட்டிய வீரன் சிவாஜி பாத்திரத்தில் கண்டு பரவசமுற்றதால் அதே சிவாஜி பெயரையே கணேசனுக்கும் இட்டு பெருமைபடுத்தினார் திராவிட இயக்கத் தந்தை பெரியார்.

தமிழ் நாட்டின் தஞ்சை மாவட்டத்திலுள்ள தீவிர காங்கிரஸ் வாதிகளில் ஒருவரான சின்னையா என்பவரின் இரண்டாவது மகனாகப் பிறந்த சிவாஜி தன்னுடன்பிறப்பு சகோதரர்களான தங்கவேலுவையும் சண்முகத்தையும் இழந்து தனியாய்த் தவித்துக் கொண்டிருக்கின்றார்.

ஆரம்பத்தில் தீவிர தி.மு.க. காரராக இருந்த சிவாஜி தனது முழுமையான நடிப்புக்கு முன் அண்ணாவின் கட்டுப்பாடுகள் நிறைந்த தி.மு.க. கொள்கைகள் தடையாகத் தெரிந்ததால் அதனை விட்டு விலகி தந்தையைப் போல் தானும் ஒரு காங்கிரஸ்காரராக மாறிக் கொண்டார். இக்காலக் கட்டத்தில்தான் ஸ்ரீ வள்ளி, திருவிளையாடல், சரஸ்வதி சபதம் போன்றப் புராணப் படங்கள் வெளியாகி சிவாஜியின் பல்சுவை நடிப்புக்கு மேலும் மெருகூட்டலாயின. இவரது நடிப்பிலே மனோஹரா, தெய்வ மகன், புதியப் பறவை, பாசமலர் பாலும் பழமும், வியட்னாம் வீடு, நவராத்திரி போன்றத் திரைப் படங்கள் எமது நெஞ்சைவிட்டு என்றும் அகலாதவை.

ஆரம்பமுதல் தான் நடித்த ஒவ்வொரு திரைப்படங்களையும்– நூறு நாட்கள் ஓடிய திரைப் படங்களென்றும் வெள்ளி விழா கொண்டாடியப் படங்களென்றும் பரிசு பெற்ற திரைப் படங்களென்றும் இனங்காட்டி அனைத்து விபரங்களையும் சென்னையிலுள்ள தனது 'சாந்தி' திரையரங்கு முற்றத்து சுவரில் வண்ணக் கோலங்களோடு தெளிவாக எழுதியிருப்பதை நாம் ஒரு பத்து நிமிடங்கள் வாசித்துக் கொண்டிருப்போமேயானால் ஓர் ஆரோக்கியமான சினிமாவை பார்த்தோம் என்ற உணர்வு எமக்குள்ளே தோன்றும்! அத்தனை பொலிவு, அத்தனை விளக்கம் அந்த அழகு சுவர் தரும் ஆக்கம்!

இருந்தும், அனைத்தையும் ஆட்டிப் படைக்கின்ற நாற்பது வருட தமிழ் சினிமாவை வைத்துக் கொண்டு இவரால் ஒரு நிலையான அரசியல் குறிக்கோளை அடைய முடியாது போனது என்னவோ இவரது பலஹீனமே! ஆனால் தற்போது காங்கிரஸிலிருந்து இவர் பிரிந்து வந்திருப்பதும் எப்படியோ தமிழ் நாட்டு இ.காங்கிரஸ் கட்சிக்கு ஒரு 'மைனஸ் பாயின்ட்' என்பதை யாரும் மறுக்க முடியாது.

எது எப்படியோ, 'நடிகர் திலகம்' என்றப் புகழோடு எத்தனையோ சிறப்புப் பட்டங்களைப் பெற்றுவிட்ட இந்தப் பெரும் நடிகரது சினிமா ஆல்பத்தை ஒரு முறை மேலோடியாக உற்று நோக்குவோமேயானால் இவருக்கு ஒரு ஆஸ்கார் பரிசோ அன்றில் ஒரு அகில இந்திய சிறந்த நடிகர் பட்டமோ கிடைக்காதது ஒரு துரதிஸ்டமே!

-- கண்ணன். -

ரோஜா அலங்கரிக்கும் முதல் சிறப்பு மனிதர்:

எழுத்தாளர்

# தெளிவத்தை ஜோசப்

அலங்காரம் என்று அணிகலன்களோடு புறப்பட்டய்போது, புறக்கண்ணிலே ஆயிரம் பகட்டு மனிதர்கள் பளிச்சிட்டார்கள். இருந்தும், எனது அகக்கண்ணுக்குள்ளே ஒரு நல்ல மனிதர் தென்பட்டார். அவர் ஓர் எழுத்தாளர், ஒரு பண்பாளர். ஆம்! இந்த மூத்த கலைஞரை, இந்த ரோஜாவின் முதல் மனிதராக கௌரவப்படுத்துவதால் இலங்கையிலுள்ள ஏனைய (அனைத்து) எழுத்தாளர்களையும் கௌரவப்படுத்துவதாகவே நான் நினைக்கின்றேன். இதில் குறிப்பாக, நமது 'தமிழ் இளைஞர் கலாசார கூட்டமைப்பு'க்கு இரட்டிப்பு மகிழ்ச்சியாயிருக்குமென நாம் நம்புவோமாக:



1934ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16ம் திகதி பதுளை, ஊவாகட்டவளையில் பிறந்த இவர் 1950ல் எழுதத்தொடங்கினர். கதம்பம் என்ற ஏடு தான் இவரது எழுத்துக்கு களம் அமைத்துக் கொடுத்தது. அதே காலகட்டத்தில்தான் மாலைமுரசு, வீரகேசரி போன்ற பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதத்தொடங்கினர்.

மண்வாசனையோடுதான் இலக்கியம் படைக்க வேண்டும் என்ற குரல் எழும் முன்னரேயே இவரது எழுத்துக்களில் மலையக மண்ணின் வாசனை பரிமளிக்கத் தொடங்கியது. இதன் காரணமாக மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசரி மூலமாக நடத்திய சிறுகதைப் போட்டிகளில் அடுத்தடுத்து முதற் பரிசுகளை பெற்றார்.

1967ம் ஆண்டு மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் இணைச்செயலாளராகத்தெரிவு செய்யப்பட்டார். இதே ஆண்டில்தான் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் சிறுகதை மன்னன் புதுமை பித்தனுக்கு விழா எடுத்தது அத்தோடு இவ்விழாவில் முன்னின்று செயலாற்றிய திரு. ஜோசப், 18. 9.1967 புதுமைப் பித்தன் விழாவன்று வீரகேசரி, சிந்தாமணி, தினகரன் பத்திரிகைகளில் புதுமைப்பித்தனின் கதைகளை வெளியிட வைத்தார்.

1979ம் ஆண்டுக்கான சாகித்தியமண்டல பரிசு இவரது முதல் சிறுகதைத்தொகுதியும், ''வைகறை'' வெளியீட்டின் முதல் வெளியீடுமான நாமிருக்கும் நாடே என்ற புத்தகத்திற்குக் கிடைத்ததோடு சாகித்திய மண்டல பரிசுபெற்ற முதல் மலையக எழுத்தாளரும் இவரே

காலங்கள் சாவதில்லை, காதலினால் அல்ல, மாதுதல்கள் போன்ற நாவல்களையும் எழுதியுள்ளதோடு இலங்கையின் தமிழ்பட வரலாற்றில் பெருந் திருப்பத்தை ஏற்படுத்திய 'புதிய காற்று' என்ற திரைப்படத்திற்கு கதை வசனமும் எழுதினர். தினகரனில் வாரம் ஒரு சிறுகதையாக விருந்து என்ற தலைப்பில் ராமேஷ் ரவீந்திரன் என்ற புனைபெயரில் மிகச்சிறந்த சிறுகதைகளை தேர்ந்தெடுத்து வழங்கியதோடு மட்டுமல்லாமல் சிறுகதை ஆசிரியர்களின் தகவல்களையும் வாசகர்களுக்கு வழங்கினர்.

வீரகேசரி பத்திரிகையில் பாலம் என்ற தலைப்பில் தாம்படித்து ரசித்த நூல்களை மற்றவர்களும் படிக்கவேண்டும் என்ற நோக்கில் நூல்கள் பற்றிய சிறப்பம்சங்களை விபரித்து எழுதினர். ஒரு நல்ல நூலுக்கும் ஒரு நல்ல வாசகனுக்கும் இடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்வே இந்ததலைப்பை இவர் தேர்ந்தெடுத்தார்.

தினகரன் பத்திரிகையில் வாரமஞ்சரியில் குறிப்புகள் என்ற தலைப்பில் திரேசா சியாமளா என்ற பெயரில் இவர் எழுதிய இலக்கிய குறிப்புகள் நாம் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷமாகும். பல வகைகளில் தமிழ் இலக்கியம் துறைக்கு இவர் ஆற்றிவரும் சேவை வளர்க, இவர் வாழ்க!

அத்தோடு இவரது பெருஞ்சேவை தனக்கும் தேவையென இந்த ரோஜா பணிவுடன் வேண்டுகின்றது கிடைக்குமா?

---

பிறந்த நாள் வாழ்த்து: இலவசம்! இலவசம்! இலவசம்!
பெற்றோர்களே! ........................

உங்களது சின்னவன் எங்களதும் பிள்ளையல்லவா! நாளையத் தலைவனை அவனை இந்தப் பிறந்த மாதத்தில் வாழ்த்துவதில் இந்த ரோஜாவுக்கு மட்டும் பெருமை இராதா என்ன? முந்திக்கொண்ட (நாம் தருகின்ற ஒரே சலுகை) உங்களது பிள்ளைகளின் பெயர்களை பிறந்த திகதியோடு இந்த அரைமாத இதழில் இதே பக்கத்தில் இலவசமாக தொடர்ந்து வெளியிடுவதில் நமக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சியே. எனவே விபரத்துடன் எழுதுவீர்களாக! (படம் அவசியமல் )

## மாணவர் பக்கம்:

எழுத்துப் பிழை இல்லாது நாம் எழுத சில சொற்கள்;

அரம் - ஒரு கருவி.
அறம் - தருமம்.
அரி - வெட்டு, திருமால்.
அறி - தெரிந்துகொள்.
அரை - பாதி.
அறை - வீட்டுப்பகுதி.

அர - நிறைய.
அற - சூடு குறைய.
இரங்கு - கருணை காட்டு.
இறங்கு - கீழே வா.
இரந்தாள் - யாசித்தாள்.
இறந்தாள் - செத்தாள்.
இரை - தீனி, இரைந்து பேசு.
இறை - அரசன், கடவுள்.
உரை - சொல்.
உறை - (தலையணை) உறை,
எரி - தீ.
எறி - வீசு.
ஏரி - நீர் நிலை.
ஏறி - மேலே போய்.
ஒரு - ஒன்று.
ஒறு - தண்டி.

எம்; கிருஸ்ணகுமார்,
விவேகானந்தா மகா வித்தியாலயம்.
கொழும்பு-13

அகப் பகை ஆறு:
காமம், மோகம், குரோதம்
உலோபம், மதம், மாச்சரியம்

அரண் நான்கு:
காடு, மலை, மதில், அகழி.

நாற்பயன்:
அறம், பொருள், இன்பம், வீடு

செல்வி, மாலா கொட்டாஞ்சேனை
த. மகாவித்தியாலயம், கொழும்பு.

மூன்றின் சிறப்பு;
முத்தமிழ்; இயல், இசை, நாடகம், முச்சக்திகள்; இச்சை, கிரியை, ஞானம் முக்குணங்கள்: ராஜசம், தாமசம், சாத்வீகம், முக்கனிகள்: மா, பலா, வாழை.

மும்மூர்த்திகள், பிரமா, விஷ்ணு, ருத்திரன், மும்மலங்கள்: ஆணவம். கன்மம். மாயை, முக்காலங்கள்: காலை, பகல், மாலை மூவுலகம்! ஸ்வர்க்கம், மத்யம், பாதாளம்,

பெ, பரசுராமன், த. ம, வி,
கொட்டகலை

திராவிட மொழிகள்!
தமிழ், கன்னடம், தெலுங்கு மலையாளம், குடகு, துளு

முரளீதரன், இந்துக் கல்லூரி'
கொழும்பு 4.

ஒன்பதும் அதன் சிறப்பும்:
நவக்கிரகங்கள் - சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, ராகு, கேது.

நவலோகங்கள்;
பொன் இரும்பு, தாமிரம், ஈயம் வெள்ளி, இரதி, மதுரம், ராசப், சந்தம்.

நவரத்தினங்கள்:
வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புஸ்பராகம், வைடூர்யம். கோமேதகம், பவளம்.

தா. பிரகாஷ்
த. ம, வி,
எட்டியாந்தொட்ட,

கல்வியென்னும் கன்னியிடம் கலங்கமில்லா காதல் கொண்டால்
சீரழிந்த வாழ்வும், சிறைப்பட்டகோலமும் பாரினிலே நமக்கில்லை.
—மலைதாசன்—

# கேள்வி

ஆசிரியர்.


# பதில்.

எஸ் நவராஜா,
ஏராவூர்.
கே. ஒருவருக்கு கொட்டாவி வரும்போது பக்கத்திலுள்ள இன்னொருவருக்கும் வருகின்றதே அது ஏன்?

ப. எந்தவொரு மனிதனது சொல்லுக்கும் செயலுக்கும் குறிப்பாக, பலஹீனத்திற்கு இன்னொரு ஜீவனுல் அனுதாபம் இருப்பது இயற்கைதானே! இதில் கொட்டாவி மட்டும் விதிவிலக்கா என்ன?

எஸ். கௌரி,
ஒளியாமண்டி.
கே, இந்தியாவில் புதிதாக உருவாகியுள்ள கூட்டணியைப் பற்றி உங்கள் கருத்து?

ப 'ஓல்ட் வைன் நிவ் போட்ல்' என்பதை உறுதி செய்யாமல் இருந்தால் நமக்கும் சந்தோஷந்தான்.



எஸ, செல்வராஜ்,
எம்பிட்டிய,
கே, வரப்போகும் பொதுத் தேர்தலில் தமிழகத்தின் நிலை எப்படியிருக்கும்?

ப. 'அரிசி காய்க்கிற' மரத்தை உருவாக்குவதற்கென்றே ஓர் இனம் தமிழகத்தில் இருக்கின்றது; அதனை திருப்திபடுத்தாத எவருமே நிலைக்க முடியாது.

எம். ஆர். ராதாகிருஸ்ணன்,
கொஸ்லந்த.
கே. அண்ணே! 'கழுதை தேஞ்சி கட்டெறும்பாச்சி' என்று கூறுவார்களே அதற்கு அர்த்தம் என்ன?

ப. அகில இந்தியகாங்கிரஸ் பொது செயலாளராயிருந்த மூப்பனர் முதலமைச்சராக வேண்டுமென்ற ஆசையால் சென்னையில் வந்து முகாமிட்டிருந்து, இப்போது எல்லாமே பறிபோய்... அவரை என்னவென்பதாம்?



ஆர்' சற்குணராஜா,
கொழும்பு. 11.
கே சௌந்தரராஜனின் ஜனரஞ்சகமான பக்திப்பாடல்களில் ஒன்றான புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே என்ற பாடலில் வரும் ஒரு வரியான 'ஒரு குடையோடு மதுராவை ஆள்கின்றவன்' என்று குறிப்பிடப்படும் 'மதுரா' என்பது தமிழ் நாட்டிலுள்ள மதுரையைத்தானே?

ப, இருக்க முடியாது இந்தியாவின் வட நாட்டிலும் மதுரா என்றொரு

இடமுண்டு. அது கிருஸ்ணனின் புகழ்பாடும் கோயில்கள் நிறைந்த ஒரு அழகு நகரமாகும். அதைத் தான் இங்கு கவிஞர் மதுரா என்று குறிப்பிடுகின்றார் என்பது என் கருத்தாகும். தமிழகத்திலுள்ள மதுரை—கூட வட நாட்டு ஆதிக்கத்திற்கு முன் 'மருதை' என்றப் பெயரோடு இருந்ததாகத்தான் யூகிக்கப்படுகின்றது.

எம், தங்கராஜ்.
அட்டன்.

கே எப்படி பார்த்தாலும் மேற்கு நாட்டாரை விட கிழைத்தேய மனிதன் பலவழிகளிலும் பலஹீனமானவன்தானே?

ப. ஒத்துக்கொள்கிறேன். அணுகுண்டை செய்த அந்த வெள்ளை மனிதனின் பரம்பரையில் ஒருவன் தான் நம். நாட்டு 'சுசியத்தைப்' பார்த்து, இந்த உருண்டைக்குள்ளே சினிப் போட்ட பயரை எப்படி வைத்தீர்கள் என்றானும். இது பலமா? பலஹீனமா?

கே. ராஜேசகர்.
பிட்டபலை டிவிசன்.

கே அம்மி மிதித்து அருந்ததிபார்த்து, என்று இந்துக்களின் திருமண வேளையில் சொல்லப்படுகின்றதே அதில் அருந்ததி பார்த்து என்றால் அர்த்தம் என்ன?

ப. அருந்ததி என்றால் நட்சத்திரம், வசிட்டனின் மனைவி, கற்பி என்றெல்லாம் தமிழ் அகராதி அர்த்தம் கூறுகின்றது. இவை அனைத்தும் கற்பு நிறைந்தப் பெண்ணையே கருப்பொருளாக வைத்து கூறப்படுகின்றது எனலாம்.

எம், சிவா,
மத்துகம.

கே அன்றைய தமிழ் சினிமாவுக்கும் இன்றைய தமிழ் சினிமாவுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப. அன்றைய நமது சினிமாவில் ஏழைவீட்டுப் பிள்ளைகளை ராஜாக்களாக கண்டோம், ஆனால் இன்றைய சினிமாவிலோ ராஜாவீட்டுப் பிள்ளைகளை பரம ஏழைகளாய் பார்க்கின்றோம். அது புஸ்ட்டி! இது நிஸ்ட்டி!

ஆர். ரவி,
ரொப்கில் எஸ்டேட்

சே, மனிதன் எச்செயலால் அதிக திருப்தி கொள்கிறான்?

ப. 'ஸ்டமக் ட்ரபல்' வரும் சமயத்தில் 'பாத்ரூமி'ல் அமர்ந்திருக்கும் போது கிடைக்கின்ற சுகமே பெரும் சுகம் என்று எனது நண்பனொருவன் அடிக்கடி கூறுவான்.

எல், தியாகராஜா,
லிண்டுல.

கே. சிவாஜியின் நடிப்பால் தங்களை வெகுவாக கவர்ந்தப் படம் எதுவோ?

ப. கௌரவம்! படத்தில் பெரியப்பா பாத்திரத்திற்கு ஒரு கௌரவம், அதில் நடித்த சிவாஜிக்கு ஒரு கர்வம் நிறைந்த கௌரவம், படத்தைப் பார்த்த நமக்குங்கூட ஒரு பெருமை நிறைந்த கௌரவம்! உணர்ச்சிகள் நிறைந்த யதார்த்தமான அப்படியொரு கதாபாத்திரத்திற்கு இனிமேல் அதே நடிகர் திலகத்தால்கூட உயிர் கொடுக்க முடியுமா? நெவர்!

---

பிரைவேட் டிஸ்பென்சரி ஒன்றில் ஒரு நாயோடு வந்த நபரைப் பார்த்து:

டாக்டர்; இவ்வளவு அவசரமா ஏங்க இந்த நாயை தூக்கிட்டு வாரீங்க?

வந்தவர்: வெறிப்பய ஒருத்தன் இந்த நாயை கடிச்சுப்புட்டானுங்க. உடனே ஊசி போடணும் டாக்டர் இல்லாட்டி இந்த நாயும் மனுசன் மாதிரி கத்த ஆரம்பிக்கும்

டாக்டர்...?...?...

---

உள்ளதைவிட ஆளப்படுவதில் ஒரு ஏக்கம் நிறைந்த சுகம்இருக்கத்தான் செய்கின்றது.

---

காவியம் படைத்த இந்த மலையகத்து மைந்தனும் ஒரு காவியமே;

# அமரர் ஸி.வி வேலுப்பிள்ளை

ஒரு குடும்பம் தழைத்தோங்க வேண்டுமாயின் நல்ல தலைவன், நல்ல வீடு நல்ல நிலம், நல்ல மாடு, நல்ல குளம் நல்ல சுற்றுடல் அவசியமாகிறது. இலக்கிய காலத்தில் மட்டுமல்ல. நவீன காலத்திலுங்கூட இந்த உதாரணங்கள் ஒத்துவையாக அமைந்து விடுகின்றன. ஒரு குடும்ப மட்டுமல்ல ஒரு சமுதாயம் சிறப்புப் பெறவும் இவை சரி பங்கு வகிக்கின்றன என்பதை வள்ளுவனுங்கூட தன் குறளின் வாயிலாக வற்புறுத்துகின்றான் என்பது நாம் கண்ட உண்மையாகும்.

நல்ல தலைவன் என்றுக் கூறும் போது அவன் அறிவுள்ளவனாகத் தன் குடும்பத்தின் மீது, சமுதாயத்தின் மீது பற்றுள்ளவனாக இருப்பவன் என்றே அர்த்தமாகும், இந்த வகையில் நாம் அலசி ஆராய்ந்தப் போது, குறிப்பாக மலையகத்து தொழிற் சங்கங்களின் பேதங்களுக்கு அப்பாற்பட்டு ஓர் உயர்ந்தக் கண்ணோட்டத்தோடு உள்நோக்கியப்போது இந்தப் பெருமகன் தனது எழுத்தோவியத்தால் எம்மைக் (காலங்கடந்து) அசத்திவிட்டார் என்று குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இவரைப்போல் இன்னும் பலர் எம் சமுதாயத்தில் இருந்திருக்கத்தான் செயதார்கள். அவர்களை வெளிச்சம் போட்டுக் காட்டுவது எமது கடமையாகும்.

''நாடற்றவர் கதை'' என்ற இவரது ஒரு சிறு நூலைப் படித்தப் போது நமக்குள்ளே ஓர் இனம் புரியா மகிழ்ச்சி, பெருமை ஏற்பட்டது என்றே கூற வேண்டும், வங்கத்து கவிஞன் தாகூரையும், தமிழகத்தின் ஒரு பெரியாரையும், அண்ணாவையும், யாழ்பாணத்திலே ஒரு கைலாசப் பிள்ளையையும் ஒத்த இந்த அறிஞனை- அதுவும் படிப்பறிவற்ற மலையகத்து மண்ணிலே கல்வியின் உச்சக் கொம்பிலே நின்ற திரு வெள்ளையனோடு இணைந்திருந்த இந்த அறிஞனை- அதுவும் ஆங்கிலத்திலுங்கூட நல்லக் கவிதைகளை வடிக்கும் திறனைக் கொண்ட இந்த தலைவனை மலையகம் சரியான முறையில் பயன்படுத்திக் கொள்ளாதது அதன் பலவீனமா? அன்றில் தன் சமுதாயத்தின் பலவீனத்தைப் புரிந்துக் கொண்டு அதற்கேற்றவாறு தன்னை பாவிக்கத் தவறியது இவரது பலவீனமா என்று எமக்கே புரியவில்லை

எது எப்படியோ, இவர் தான் எழுதிய இந்த, நாடற்றவர் கதை என்ற நூலின் வாயிலாக தன் சமுதாயத்தின் மீது எந்தளவுக்கு அக்கறையும் ஆதங்கமும் கொண்டிருந்தார் என்பதை எம்மால். உணர முடிகிறது ஆகவே, அவர் சமைத்த அந்த நூலிலிருந்து சிலவற்றை தேன்துளிகளாக இங்கே வடித்து தருகின்றோம். சற்றே சுவைத்துப் பாருங்கள்

இலண்டனில் வசிக்கும் பிரித்தானியப் பேரரசின் பெண் குலம் மாலை வேளைகளில், தேநீர் அருந்தி மகிழ எங்கள் தமிழ்ப் பெண்கள் இலங்கையின் தேயிலைக் காட்டில் ஏக்கப் பெருமூச்சுடன் கொழுந்து பறித்து நெஞ்சம் குமுற வேண்டும். அந்தத் தேநீருக்குச் சர்க்கரை சேர்க்க, பியூஜித் தீவின் கரும்புத் தோட்டங்களில் எங்கள் தமிழ் மாதர் விம்மி, விம்மி அழவேண்டும். இதுதான் ஏகாதிபத்திய பொருளாதார அமைப்பு. சுதந்திரம் பெற்ற பின்னரும் இந்த ஏகாதிபத்திய பொருளாதார முறையை நாம் இன்னும் முறியடிக்க முடியவில்லை. அதனால்தான் கடல் கடந்த இந்தியரின் இழிவு நீங்கவில்லை.

–நாடற்றவர் கதை என்றப் புத்தக வெளியீட்டுக்கு திரு இரா. சிவலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட ஒரு விளக்கவுரை.

• பிள்ளைகளுக்கு கதை கேட்பதில் எத்தனை இன்பம்! கதை சொல்லுவதில் பாட்டிக்கு தனி இன்பம். பாட்டி தான் கண்டதையும், கேட்டதையும் –தன்னைப் பற்றியும் தன் குடும்பம், தன் பந்துக்கள், தன் கிராமம், தன் ஊர், தன் இன்ப துன்பம் இவைகளைப் பற்றியும்– கதை கதையாகச் சொல்லுவாள்.

பேரன் பாட்டியைக் கதை சொல்லும்படி கேட்டபோது அவள், நான் பிறந்த கதை சொல்லுவேனு, நான் பட்ட கதை சொல்லுவேனு என்ற கேள்வியைச் சொல்லி கதையை ஆரம்பித்தாளாம்.

பல வருடங்களுக்குப் பின் மலை நாட்டில் பிறக்கும் ஒரு பேரன் தன் பாட்டியிடம் கதை சொல்லும்படி கேட்டால், அநேகமாய் பழைய பாட்டி சொன்ன பதிலையே சொல்லுவாள். அது நாம் பிறந்த கதையாகவும் நாம் பட்ட கதையாகவும் தான் இருக்க முடியும்.

இந்த கதை நாடற்றவர், வீடற்றவர் கதை

• நம் மூதாதையர் இலங்கையின் கோப்பி, தேயிலை இவைகளை பயிர் செய்ய வருமுன் தமிழ் தொழிலாளர்கள் இங்கு இருந்ததாகத் தெரிகிறது. டச்சுக்காரர்கள் இந்தியாவையும், இலங்கையும் ஆட்சி செய்த காலத்தில் முதன் முதலாக அவர்கள்தான் 10,000 தமிழ் தொழிலாளர்களை கருக மரத்தை (கருக பட்டை) பயிர் செய்து அதன் பட்டையை உரித்து பாடம் பண்ணுவதற்காக் கொண்டு வந்தார்கள். இவர்கள் இலங்கையில் நிரந்தரமாய் தங்கியது பற்றியோ அல்லது திரும்பிப் போனது பற்றியோ தகவல் இல்லாவிட்டாலும், இதை உண்மையாகக் கொள்ளலாம்.

• மலைநாட்டு மக்களது கதை 1823ஆம் வருடம் கவர்னர் எட்வெட் பார்ன்ஸ் பேராதெனியாவிற்குப் பக்கத்தில் ஆரம்பித்த கன்னொருவ என்ற கோப்பி தோட்டத்திலிருந்து ஆரம்பிக்கிறது.

• 1823ஆம் வருடம் கவர்னர் எட்வெட் பார்ல்ஸ் பேராதெனியாவுக்கு அருகாமையில் அமைத்த கன்னொருவ தோட்டத்திலிருந்துதான் மலைநாட்டு மக்களது சரித்திரத்திற்கு பிள்ளையார் சுழி போடப்பட்டது.

• இவர்களது சரித்திரம் உலக அடிமை மக்களது சரித்திரத்தின் பிற்பகுதியாகும்;

• தென் இந்தியாவில் ஆள் கட்டிகள் வட இந்தியாவில் ஆள் கட்டிகள் என்று தரகர்களை ஏற்படுத்தி ஆள் கட்டினார்கள். அன்று இந்தியாவை ஆட்சி செய்த பிரிட்டிஷ் கவர்மெண்ட், இந்தியர்களை ஒப்பந்தக் கூலிகளாக மேற்கிந்திய தீவிற்கு ஏற்றுமதி செய்தது.

• இன்று தேயிலை எப்படி பல நாடுகளில் பயிர் செய்யப்படுகின்றதோ' அதேபோல் அக்கால கட்டத்தில் கரும்பு, கோப்பி பயிர் செய்யப்பட்டது: அப்பொருட்களுக்கு உலக சந்தையில் பெரும் கிராக்கி. எனவே இலங்கையிலும் கோப்பி பயிர் செய்ய நாம் குறிப்பிட்ட கன்னொருவாவில் கோப்பி தோட்டம் ஸ்தாபிக்கப்பட்டது. இது அரசின் தோட்டம்.

• தமிழ் நாட்டிலிருந்து நம் மக்களைக் கூலிகளாகக் கொண்டு வந்தது இப்பொழுது பல கோணங்களிலிருந்தும் ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது இது சம்பந்தமாக ஒருசில ஆராய்ச்சி நூல்களும் வெளிவந்திருக்கின்றன. இவைகளெல்லாம் அந்தக் காலத்து உண்மைச் சரித்திரத்தையோ அல்லது அம்மக்களின் அனுபவங்களையோ ஈடு செய்யக் கூடிய முறையில் எழுதப்படவில்லையென்றுதான் சொல்ல வேண்டும். எனினும், தொன்றுதொட்டு வழக்கம் போல் தங்கள் அனுபவங்களையும், உணர்ச்சிகளையும் அவர்கள் பாடிய பாடல்களில் நமக்குத் தந்திருக்கிறார்கள். அந்தப் பாடல்கள் அவர்களது சரித்திரத்தை மண் மணத்தோடும், உயிர்த் துடிப்போடும் தருகின்றன. இவைகளைக் கூர்ந்து கவனித்தால், அவர்கள் எந்த சூழ்நிலையில் இந்தப் பாடல்களைப் பாடினார்கள். அப்பொழுது தமிழ் நாட்டுக் கிராமங்ளில் அவர்கள் சமுதாயம் எப்படியிருந்து, கண்டிச்சீமைக்கு வந்து எப்படிப்பட்ட சமுதாயத்தை அமைத்தார்கள் என்பது தெளிவாகும்.

• உள்ளூர் பண்ணையார்கள் மீது வெள்ளையர்கள் விதித்த கெடுபிடிகளால் கிராமத்து(தமிழக) பொது மக்கள் வேலையில்லாத் திண்டாட்டத்தினாலும் உணவுப் பற்றாக்குறையினாலும் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். எனவே இவர்கள் வெளிநாடுகள் சென்று தங்கள் வயிற்றைக் கழுவிக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. காலனிகளுக்கு கூலிகளை அனுப்ப பிரிட்டிஷ் அரசு இதை ஒரு உபாயமாகக் கையாண்டது.

• ''கூனி அடித்த மலை
கோப்பி கன்னு போட்ட மலை
அண்ணனை தோத்த மலை
அங்கே தெரியுது பார்.''

• ''இங்கோரும் கட்டியாச்சு
இஞ்சி தீரும் பூட்டியாச்சி
இள வெட்ட பொண்டுகளே
எல பொருக்க வந்திடுங்க.''

• ''சண்டாள வெள்ளையர்களுக்கு
ஆட்டுத்தோலுக்கு இடம்
கொடுத்ததாலே வந்த மோசம்
அதனாலே வந்த தோஷம்.''

• ''கண்டி கருப்பாயி
கம்பளத்து மீனாட்சி
ஒத்தக்கடை ராமாயி – உன்
உசிரிருந்தால் போதுமடி.''

தன் சமுதாயம் எப்படி வாழ வேண்டுமென்று கனவு காண்கிருர் இங்கே ஒரு நவபாரதி (கவிஞர் முத்து சம்பந்தர்) அவரையும் எம்மால் நினைவு கூருமல் இருக்க முடியவில்லை. பாராட்டாமல் இருக்க முடியவில்லை, அரங்கத்தில் நிறுத்தி அழகு பார்க்காமல் இருக்கவும் முடியவில்லை.


என்று தனியுமோ என்
இதயத்தின் தாகம்.
(கனவு)

தோட்டங்கள் தோறும்
கிராமங்கள் கண்டேன்
கிராமத்துப் பெண்களாய்
நம் நங்கையர் கண்டேன்
குடும்பத்துக் கொன்ருய்
தனித்தனி வீடு
வீட்டுக்கருகில் காய்கறிதோட்டம்
மரவள்ளி வற்ருளை
தோட்டத்தில் கண்டேன்.
பருப்பும் கடலையும்
இடையிடைக்கண்டேன்.
வெங்காயம் தக்காளி
ஆங்காங்கே கண்டேன்.
வெற்றிலைக்கொடி கூட
ஓடிடக் கண்டேன்.
வீதிகள் தோறும்
விளக்குகள் கண்டேன்.
வித்தியாசாலையும்
அங்கொன்று கண்டேன்.
விலைகள் மலிவான
பொதுசந்தை கண்டேன்.
விளையாட்டு மைதானம்
ஒன்றிருக்கக் கண்டேன்.
கன்னியர் காளையர்
ஆட்டமும் கண்டேன்.
கன்னியர் ஆடிய
கும்மியும் பார்த்தேன்;
களைப்பு அகன்றிடத்
தெம்மாங்கு கேட்டேன்.
அழகழகான நல்
முற்றங்கள் கண்டேன்.
அழகிய குழந்தைகள்
ஆடிடக் கண்டேன்.
அழகிய நீரோடை
ஓடிடக் கண்டேன்.
அழகன் முருகன்
தோற்றமும் கண்டேன்.
தோட்டத் துரையவன்
கெஞ்சிடக் கண்டேன்.
அஞ்சாத தொழிலாளர்
வாதிடக் கண்டேன்
சுதந்திரமா யவர்
வாழ்வது கண்டேன்.
என்று தனிமோவென்
இதயத்தின் தாகம்,

நன்றி: கவிதை நூல், 'முத்துத் துளிகள்'

அவன்; ஆடியில ஏன் திருமணம் முடிக்கக் கூடாதுன்னு சொல்லுருங்க?
இவன்!, ஜனத்தொகைய கட்டுப்படுத்த என்ன செய்யிறதுன்னு யோசிச்சு பாத்திருப்பானுக அந்தக் காலத்தில நம்ப பயலுக. பன்னிரெண்டுல ஆடி வகையா மாட்டிக்கிச்சு, அவ்வளவுதான்.

எங்கு பார்த்தாலும் பச்சை பசேலென்ற தேயிலைச் செடிகளுடன் ஒரு காலத்தில் இரண்டாயிரம் தொழிலாளர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் சந்தோசத்துடன் சோறு போட்ட பெயர் போன கலஹா குரூப் தேயிலைத் தோட்டத்தில் இன்று உற்சாகமிழந்து இங்கொன்றும் அங்கொன்றுமாய்க் காணும் தேயிலைச் செடிகளை விரல்விட்டே எண்ணிவிடலாம் போலும்' தேயிலை தோட்டந்தான் அப்படியென்ருல் அதன் பாக்டரி? அன்று இலங்கையின் மிகப்பெரிய தேயிலைப் பாக்டரிளில் முதல் வரிசையில் இருந்த அதன் இன்றைய அவல நிலையைத்தான் இங்கு படத்தில் காண்கிறீர்கள்.



பெரும் பேச்சாளர்கள் ஓட்டைப் பாத்திரங்களைப் போன்றவர்கள், அவைகளில் ஊற்றியதெல்லாம் வெளியே போய்விடும்.

**தமிழ் நாட்டு - மதுரைக்குப் பக்கத்திலுள்ள திருமங்கலம் என்னும் நகரத்திலுள்ள வீடொன்றின் வெளிச்சுவரில் எழுதப்பட்ட ஒரு விந்தையான வேண்டுதல்!**

'அன்பே!
உன்! நினைவால் நான் அன்றுடம் உருகி, உக்கிப் போயுள்ளேன் உன்னைத் தேடி அலைத்து கால்களும் தேய்ந்து போய்விட்டன. ஒரு நாளா, இருநாளா நான் உன்னை அடைய விரும்பி? ஆண்டுகளோ நான்காகிவிட்டன. என் நிலையை எண்ணி என் பெற்ருேரோ தம்நிலை தடுமாறியுள்ளனர். நீ என்னைக்காதலித்தால்தான் வாழைக் குருத்தாய் நிற்கும் என் தங்கைமார் இருவரையும் என்ஞல் கரை சேர்க்க முடியும், பெற்ருேரையும் தம்பிமாரையும் சந்தோசப்படுத்த முடியும். அழகே! நான் எம். ஏ. படித்தவனம்மா, ஆதலால் என்னை ஏமாற்ருதே! கண்ணே! (கன்னி கழிந்திருந்தாலும்பரவாயில்லை) ஒவியமே! குதிரைக் கொம்பே!தெய்வமே தொழிலே! வேலையே! வெட்டியான என்னை இவ்வேளையில் நேசி! என்னை இனிமேலும் கைவிட்டுவிடாதே! ஓடிவா ஓடோடிவா; தொழிலே! வேலையே...வா!வா...

# அவள் அழுகின்றாள்.

மலையகத்து இளந்தாய் ஒருத்தியின் சோகமான ஓர் இரவு!

அழுகின்றாள் அவள் அழுகின்றாள் - பாலுக்காக
பரிதவிக்கும் பச்சிளம் குழந்தையைப் பார்த்து அழுகின்றாள்
அரைப் பட்டினியோடு அயர்ந்து உறங்கும் தன்
ஏனையப் பிள்ளைகள் மூவரையும் பார்த்து அழுகின்றாள்.

பத்துக்குப் பத்தடி அறைக்குள்ளே - கூரைத்
தகரத்தையும் ஓட்டையாக்கி விழுகின்ற மழைத்
துளிகளையும் குலை நடுங்கும் ஈரக்
குளிரையும் தாங்காது அழுகின்றாள்.

காலையில் கொழுந்து பறிக்கச் சென்று - தடுக்கிய
வழுக்குப் பாறையால் பழுதடைந்துப்போன
தன் வலது கையைப் பார்த்து
அ ழு கி ன் றா ள்.

பத்தாம் திகதியாகிய அடுத்த நாள் - சம்பள
வாசலிலே வாங்கிய கடனுக்காக
மொய்த்து நிற்கும் 'பிராண்டிகளை' கற்பனை செய்து
அ ழு கி ன் றா ள்.

அதற்கெல்லாம் மேலாக ஆறு நாட்களுக்கு முன் – தன்னையும்
குழந்தைகளையும் அம்போ என்று பரிதவிக்கவிட்டு நோயால்
மண்ணோடு மண்ணாகிவிட்ட தன் கணவனை நினைந்து
அ ழு கி ன் றா ள்.

இரவோடு ஓர் இரவாகி தம் வாழ்வும் இருளாகிவிட்டதையெண்ணி
அழுகின்றாள் அவள் அழுகின்றாள் நடுசாமம்வரை அழுகின்றாள்
ஆறுதல் தரவோ யாருமில்லை அதனால் அவள்
அழுகின்றாள்– அழுகின்றாள் விடிய மணி ஐந்தாகியும் இன்னும்
அ ழு து க் கொ ண் டே யி ரு க் கி ன் றா ள்.

எஸ்.எம்.

# வ ழி கா ட் டி

..............

'காலம் எனக்கொரு (உனக்கொரு) பாட்டெழுதும்..'



மகா ஆத்மா காந்திஜி தன் இலட்சிய வாழ்வின் வழிகாட்டியாக ஏற்றுக்கொண்டவரோ ஒரு ரஸ்ய ஞானி டால்ஸ்டாய்;
சுவாமி விவேகானந்தருக்கோ ஒரு இராமகிருஸ்ண பரமஹம்சர்;
கவிவேந்தர் தாகூருக்கோ வழிகாட்டி வேதவித்துக்கள்!
பார்புகழ் பாரதிக்கோ ஒரு கம்பன்,ஒரு வள்ளுவன், ஓர் இளங்கோ;
மேதை தமிழ்வாணனுக்கோ ஒரு திருவருட்பிரகாச வள்ளலார்!
உனக்கோ ஓர் அண்ணா! ஆனால் எமக்கோ வழிகாட்டி – என்றும் நீயே யானையோ!

ஓ! மண்ணிலே தோன்றிய விலைமதிப்பற்ற மாணிக்கத்தை மண்ணுக்குள்ளேயே புதைத்து ஆண்டுகளோ ஒன்றரையாகிவிட்டன. ஐயகோ! நினைக்கையில் கண்கள் குளமாகின்றன, நாவோ வரண்டுவிடுகின்றது. ஆனால் உள்ளம் மட்டும் எதிலும் விசும்பாமல், பிதற்றாமல், கோழையாகாமல் உறுதியாய் நிற்கின்றது!
ஓ! அதுதான் நீ எமக்கு சற்றுத் தந்த வாழ்க்கைப் பாடமோ!
வெளிச்சம் போட்டுக் காட்டிய நல்வழியோ!

V. S. --அமைப்பாளர்-- 'நாம்'

# அ மை தி யே...

உலகாளும் பெருமன்னனும் ஒரு நாள் பிடிசாம்பல் என்ற தத்துவத்தை தம் நெற்றிப் பட்டையனின்றும் சொல்லாமல் சொல்லி பளிச்சிட்டுக் காட்டும் சைவர்களாம் இந்துக்களும், அகிம்ஸாமூர்த்தியாம் சித்தார்த்தரின் புத்தமும், அருமையாம் கிறிஸ்தவமும் பெருமையாம் இஸ்லாமும், பொங்கிவரும் கங்கையாய் மகாவலியும் களனியும், அள்ளித் தரும் செல்வமாம் தேயிலையும் தென்னையும் இறப்பரும், அருமை விவசாயமும், மண்ணையும் மண்ணுக்காமல் சலித்தெடுத்தால் விழித்துக்கொண்டு வரும் இரத்தினமும், உண்மை வீரர்களும், உயர்வு நிறை அறிவாளிகளும், நேர்மையான உழைப்பாளிகளும், வளமாய் நிறைந்து காணப்படும் கி. ஆசியாசிவின் சுவிட்சலாந்தாம் இந்த இலங்கைத் திருநாட்டில்தான் இன்று அமைதி என்பது மருந்துக்குக்கூட கிடைப்பதாக இல்லை.

ஆதலால், சம்மந்தப்பட்ட அனைத்து ரகங்களே. (அரசையுந்தான்) நீங்கள் இன்னும் சித்திப்பதாக! ஆக்கம் நிறைந்த எமது இரத்தங்களின் இரத்தம் மட்டும் சிந்தியதாக இருக்கட்டும்! இனியும் நமது எதிர்கால சந்ததி அனைத்தின் செங்குருதியும் வீணே நிலத்தில் சிந்தி பசுமை தரும் பூமியை மேலும் சிவப்புக்காடாக்கலாகாது! ஆம்! நமக்கொரு புரிந்துணர்வும் அதற்கொரு செயல்பாடும் வேண்டும், நமது உள்வீட்டு சண்டையால் அடுத்த வீட்டான் புகுந்து தனக்கென்று ஒரு வலுகட்டாய சமுதாயத்தை அவன் உருவாக்க நாம் பொறுப்பாகலாமோ? தற்செயல் வரலாறு தந்த மாற்றமுடியா எத்தனையோ வடுக்களை உலகளாவிய ரீதியில் நாம் பார்த்துவிட்டோமல்லவா! அவற்றைக் கோடிட்டுக்காட்ட இந்த ஏடுதான் போதுமோ என்ன? ஆதலால், நமக்குள்ளே புரிந்துணர்வு வேண்டாமோ?

ஓ! சம்பந்தப்பட்டவர்களே! எங்கள் ஏக்கம் நிறை ஹீனக் குரலும் உங்கள் செவிகளில் எட்டுமாக! கிட்டுமாக அமைதி! அமைதியோ அமைதி! நிரந்தர அமைதி!

# 6ம் மாத நினைவஞ்சலி!



வி. சுப்பிரமணியம் Hd. K.G.
பிறப்பு: 27.8.1923.
இறப்பு;28.12.1988

இலட்சுமி அம்மாள்
பிறப்பு: 30.12.1928
இறப்பு; 28.12.1988

காலத்தின் கோலம் நாம் உங்களை இழந்தது.
கண்ணீரின் கோலம் இன்னும் எம் விழிகளிலே அது கசிந்துக்கொண்டிருப்பது
உங்கள் கோலம் கல்லாய் சமைந்து நிற்பது – ஆனால்
எங்கள் கோலமோ பித்தாய், நடைப் பிணமாய் அலைந்து திரிவது

ஓ! ஏற்றிய தீபமும் பொய்யா?
காட்டிய கற்பூரமும் பொய்யா?
போற்றிய தெய்வமும் பொய்யா?
மீட்டிய சப்த வீணையில் எழும்பிய அழகு நாதமும் பொய்யா?
தர்மமே நீ எங்கே;
நல்ல தலைமைத்துவமே நீவிர் எங்கே?

ஓ! நீங்கள் பேசமாட்டீர்கள்! ஆனால் நீவிர் காட்டிய நல்வழியைவிட்டு நாம் என்றும் பிசகமாட்டோம்! இதுதான் காலமெலாம் நாம் உங்களுக்கு செய்யும் நன்றிக் கடனாகும்! சத்தியமுமாகும்!


உங்கள் பிரிவால் வாடும் மகன்மார், மகள்மார்,
மருமக்கள்மார், பேரப்பிள்ளைகள், பெறு மக்கள், உறவினர்
மற்றும் தோட்டத்து பொது மக்கள்.

மஞ்சக்கொல்லை தோட்டம். லெவலன் குரூப். புப்புரஸ்ஸ.

S.LANKA'S VARIETY PACKED (FORTNIGHT) TAMIL MAGAZINE
EDITOR; MARUTHU MANOHARAN (V.S. MARUTHAPPAN)









இப்புத்தகம் 116/1, செட்டியார் தெரு, கொழும்பு 11 என்ற விலாசத்தி லுள்ள வீ, எஸ், மருதப்பன் (மருது- மனோஹரன்) என்பவரால் வெளியிடப்பட்டது. அச்சு கோத்தல் - ஆசிரியர், உதவியாளர்கள். அச்சு - பதிப்பு ) பாரதி பிரஸ்.